

# கருணாகரன்

# ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பயணியின்
# போர்க்காலக்
# குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்

## கருணாகரன்

கருப்புப் பிரதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பயணியின்
போர்க்காலக் குறிப்புகள்
கவிதைகள்
கருணாகரன்

முதற்பதிப்பு: டிசம்பர் 2012
வெளியீடு: கருப்புப் பிரதிகள்
B55, பப்பு மஸ்தான் தர்கா
இலாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005., பேச: 9444272500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com
முகப்பு: றஷ்மி
உள்வடிவமைப்பு: ஜீவமணி
நூலாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ்
**விலை: ரூ 80**

**oru payaniyin porkkala kurippugal**
Karunakaran

First Edition: Dec 2012
By: Karuppu Pradhigal
B-55, Pappu Masthan Darga
Lloyods Road, Chennai - 600 005. Cell No. 9444272500
Tamilnadu, South India
email: karuppupradhigal@gmail.com
Cover: Rushmi
Layout: Jeevamani
Printed by Jothy Enterprises

**Price: Rs. 80**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கருணாகரன்**

1963இல் இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்தார். இதுவரையில் 'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்', 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்', 'பலியாடு', 'எதுவுமல்ல எதுவும்' என நான்கு கவிதைத் தொகுதிகள் வெளியாகியிருக்கின்றன.
ஊடகவியலாளர், கவிஞர், பத்தி எழுத்தாளர் எனப் பல நிலைகளில் இயங்கிவருகிறார்.

இவருடைய கவிதைகள் சிங்களம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மின்னஞ்சல்: poompoom2007@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. பாலகுமாரனுக்கும்
நிலாந்தனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்புக் குறிப்புகள்...

பேரினவாத அரசும், விடுதலைப் போராளிகளும் சேர்ந்து குலைத்த காலத்தின் குறிப்புகள் இக்கவிதைகள். வீடு மட்டுமல்ல, நாடு, வாழ்வு, நல்லிணக்கம் ஏன் எல்லாமும் அர்த்தம் சிதைந்த கூடுகளாய் போய்விட்டன இப்போர்க்கால குறிப்பேட்டில்.

ஆன்மீகமற்ற ஆன்ம வெளிப்பாட்டினை கவியச் செய்து ஏதிலியாக்கப்பட்டதற்கு சாட்சியாக்குகிறது கருணாகரனின் இக்கவிதைகள்.

மேடைப் பேச்சையும், நாடகத் தமிழையும் அரசியலாய் பயின்ற அல்லது, இராணுவ வாதங்களையும், துரோகிப் பட்டங்களையும் கவச வாகனங்களாய் தாங்கிச் சுமந்த நம்மால் தொடரமுடியாத கவிதைகளை பார்த்துக் கொண்டிருந்த கருணாகரனின் கண்கள் இப்போது நம்மை உற்றுப் பார்க்கத் தொடங்குகின்றன. நம்பிக்கையையும், அவநம்பிக்கையையும் இனி நாம் விதைப்போமாக. வசித்தலும் வாசித்தலும் நமது அரசியற் பிரக்ஞையால் உருவான மனதை திருப்தி படுத்திக் கொள்ளவே செய்கிறோம். அதையே பரப்புதலுக்கான ஊடக வெளியாகவும் வைத்திருக்கும் கருப்புப் பிரதிகளின் வழியே இத்தொகுப்பை வெளியிட வாய்ப்பளித்த கவிஞர் கருணாகரனுக்கும், துணையாய் நின்று தொகுப்பாக்க உதவிய தோழர்கள் தமயந்தி - பானுபாரதிக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தூர தேசத்தில் நின்றபடி பதிப்பில் துணை செய்துகொண்டிருக்கும் தோழி அமுதாவிற்கும், நண்பர் ஷோபாசக்திக்கும், நூலின் வடிவமைப்பை அழகாக்கிய ஜீவமணிக்கும், றஷ்மிக்கும், மதிவண்ணன், விஜய் ஆனந்த், புனித பாண்டியன், விஜயன், மெலிஞ்சிமுத்தன் (கனடா) அறிவொளி, அய்யனார், செந்தில் உள்ளிட்ட நட்பு குழுமத்திற்கும் நன்றியினை தெரிவிக்கிறோம்.

தோழமைசார்ந்து,

**நீலகண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

வே. பாலகுமாரன், நிலாந்தன், தயாளன், றஷ்மி, பிரதீபா, தான்யா, த. அகிலன், புவனசிங்காரன், சித்தாந்தன், ரமேஸ், வசந்தி, ஸ்ரீகுமரன், தமயந்தி, பானு, நீலகண்டன், ஜீவமணி.

'மலைகள்', 'வார்ப்பு', 'திண்ணை', 'ஞானம்', 'பொங்குதமிழ்', 'மறுபாதி', 'எதுவரை', 'புதுவிசை', 'வல்லினம்', 'தீராநதி', 'நங்கூரம்', 'யாழ்.கொம்', 'மாற்றுப்பிரதி' 'காலச்சுவடு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைதான் மூலப்பிரதி

எது உண்மை? பலம்தான் உண்மை என்று நீட்ஷே சொன்னார். ஈழப்போரிலக்கியப் பரப்பில் வெற்றி பெற்றவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் எந்த ஒரு படைப்பாளியும் வெற்றி பெற்ற தரப்பிற்கு எதிரான உண்மைகளை வெளிப்படையாக பேச முடியாத ஓர் இலக்கியச் சூழல் நிலவி வந்திருக்கின்றது. நிலவுகிறது. தோற்கடிக்கப்பட்ட தரப்பிற்கு அல்லது அந்த நிலத்தில் அதிகாரத்தில் இல்லாத தரப்புக்குச் சாதகமான உண்மைகளை எழுத நினைக்கும் படைப்பாளி ஒரு வரையறைக்கும் அப்பால் போக முடிந்ததில்லை. குறிப்பாக அந்த எழுத்து 'அக்ரிவிஸம்' எனப்படும் வளர்ச்சிக்கு போக முடியாத அதாவது, செயலுருப்பெற முடியாத சூழலே காணப்படுகின்றது. நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின்னரும் நிலமை அவ்வாறுதான் உள்ளது. தோற்கடிக்கப்பட்ட தரப்பின் நியாயங்களை அல்லது அதற்கு சாதகமான உண்மைகளை எழுத வெளிப்படையாக அஞ்சும் ஒரு நிலை.

இதை விளக்க மிகக் கசப்பான ஒரு உதாரணத்தை என்னால் கூறமுடியும். நான்காம் கட்ட ஈழப்போர் முடிந்தபின் நலன்புரி நிலையங்களில் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது எனது இலக்கிய நண்பர்கள் அல்லது புத்திஜீவி நண்பர்கள் அல்லது கோட்பாட்டு நண்பர்கள் என்ற வகைக்குள் வரும் எவருமே என்னை வந்து பார்க்கவில்லை. இதை நான் இங்கு ஒரு நிந்தனையாக முன்வைக்கவில்லை. அது ஒரு யதார்த்தம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதாவது இங்கு ஏற்கனவே குறிப்பிட்ட கலை இலக்கிய யதார்த்தத்தின் தொடர்ச்சியே அது என்ற அர்த்தத்தில்தான் இங்கு நான் அதை எடுத்துக் காட்டினேன். தோற்கடிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வந்த படைப்பாளிகளைச் சென்று சந்திப்பதற்கே அச்சப்படும் ஒரு சூழலில் உண்மையின் எல்லா நுண் கூறுகளையும் எப்படி வெளிப்படுத்த முடியும்?

எனவே, ஈழப்போரிலக்கியப் பரப்பில் உண்மையை ஏதோவொரு விகிதமளவுக்கு விழுங்கிக் கொண்டு எழுதும் ஒரு பாரம்பரியமே தொடர்ந்து பேணப்பட்டு வந்துள்ளது. வருகின்றது. ஒன்றின் அச்சம் காரணமாகவோ அல்லது சட்டரீதியான தணிக்கை காரணமாகவோ அல்லது சுயதணிக்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்பட்டோ அல்லது இறுதி இலட்சியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற விசுவாசத்தின் பேராலோ அல்லது தான் சார்ந்த தரப்பை பலவீனப்படுத்தக்கூடாது என்ற சரியான அல்லது பிழையான பொறுப்புணர்ச்சியின் காரணமாகவோ அல்லது ஏதோவொரு அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு உட்பட்டோ உண்மையானது ஏதோவொரு விகிதமளவுக்கு விழுங்கப்பட்டே வந்துள்ளது அல்லது வேறு ஒரு காலத்திற்கு கூறப்படுவதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது அல்லது உறங்கு நிலையில் வைக்கப்பட்டுள்ளது அல்லது அடைகாக்கப்படுகிறது.

இத்தகையதொரு சுமார் மூன்று தசாப்த கால கலை இலக்கிய பாரம்பரியத்தில் எழுத்தாளர்களாக அல்லது எழுத்து ஊழியம் செய்பவர்களாக அல்லது கதை சொல்லிகளாக அல்லது கவிஞர்களாக, விமர்சகர்களாக, ஆய்வாளர்களாக, பாடகர்களாக, ஊடகவியலாளர்களாக இருந்த எல்லோருமே மறைக்கப்பட்ட அல்லது விழுங்கப்பட்ட அல்லது ஒத்திவைக்கப்பட்ட உண்மைகளுக்கு பொறுப்பாளிகள் தான். ஒரு காலகட்டத்தின் இரத்தமும், இரத்தப் பழியும் எங்கள் எல்லோருடைய கைகளிலும் எழுத்துக்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன.

வங்கக் கடலில் கழுவியும் அது போகாது. நந்திக் கடலில் கழுவியும் அது போகாது. எந்தக் கடலில் கழுவியும் அது போகாது. ஏனெனில் நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின்னரும் அந்தப் பாரம்பரியம் தொடர்வதற்கு நாங்களும் பொறுப்பாயிருக்கின்றோம்.

நாங்கள் இப்பொழுதும் உண்மைகளை விழுங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு புறம் அச்சம் காரணமாக இன்னொரு புறம் எதிர்காலத்தைக் குறித்த ஒளிமிகுந்த நம்பிக்கை ஒன்றிற்காக அல்லது ஏதோவொரு விசுவாசத்தின் நிமித்தமாக. எதற்காகவாயினும் நாங்கள் உண்மைகளை விழுங்கிக் கொண்டிருக்கின்றோம் அல்லது ஒத்திவைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனாலேயே எங்களின் மொழி நேரடித் தன்மை குறைந்ததாகவும், பூடகமானதாகவும், மூட்டமானதாகவும் அமைந்து விடுகிறது. கடந்த சில தசாப்த காலங்களாக நாங்கள் எல்லாவற்றையும் ஸ்தூலமான வார்த்தைகளால் கூற முடியவில்லை. இத்தகைய ஓர் சூழலில் ஒன்றில் மௌனமாக இருக்க வேண்டியிருக்கிறது அல்லது அரூபமான வார்த்தைகளின் பின் ஒளிந்து கொள்ள வேண்டியிருக்கிறது அல்லது வரிகளிற்கிடையில் பொடி வைத்து எழுத வேண்டியிருக்கிறது.

செயலுக்குப் போகாதவரின் எழுத்து எப்படியுமிருக்கலாம். தனது எழுத்துக்களை விடவும் தனது வாழ்க்கையே ஒரு மேலான பிரதி எனக் கருதும் ஒருவர் எல்லாவற்றையும் எல்லாக் காலங்களிலும் எழுதிவிட முடியாது. அதாவது தனது சொற்களுக்கு தனது வாழ்க்கை மூலம் சக்தியேற்ற முற்படும் எந்த ஒரு படைப்பாளியும் தனது எழுத்தைவிடவும் தனது வாழ்க்கையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான ஒரு பிரதி என்று கூறுவார். அவருடையது ஒருவித அடைகாக்கும் மொழியாயிருக்கும்.

இத்தகைய அரசியல் கலை இலக்கிய மற்றும் தொடர்பாடற் சூழலில்தான் கருணாகரனின் இத்தொகுப்பு வெளிவருகிறது. இது மேலே சொன்ன கலை இலக்கிய பாரம்பரியத்தின் அதாவது, உண்மையின் ஏதோவொரு பகுதியை சொல்லாதுவிடும் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக உள்ளதா? அல்லது விலகலாக உள்ளதா?

நான்காம் கட்ட ஈழப்போரும் அதற்குப் பிந்திய வாழ்வுமே இத்தொகுப்பின் பாடுபொருட்களாகும். ஆயின் நான்காம் கட்ட ஈழப்போர்க்களத்தின் உண்மைகள் அனைத்தையும் இத்தொகுப்பு வெளிக்கொண்டு வருகிறதா அல்லது இதில் ஏதும் "விடுபடுதலின் அரசியல்" உண்டா?

நான்காம் கட்ட ஈழப்போர் அரங்கை குறிப்பாக அதன் இறுதிக் கட்டத்தை கருணாகரன் 'சாவரங்கு' என்று வர்ணிக்கிறார். இக்காலப் பகுதியில் அவர் எழுதிய குறிப்புகளை 'மரணவெளிக் குறிப்புகள்' என்றும் அழைக்கிறார். சிலுவை, இறுதி முத்தம், தண்டனை, உண்மை என்பவற்றிற்கான முகாந்திரம் என்ற தலைப்பின் கீழ், அவரால் தொகுக்கப்பட்ட கவிதைகளில் மிகச் சிலவே எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கைகளோடு முடிவடைகின்றன. ஏனைய பெரும்பாலானவை அவலச்சுவை மிக்கவைதான். தொகுத்துப் பார்த்தால் இத்தொகுப்பின் உள்ளடக்கத் தொனியாக கிடைப்பது வியாகுலம் தான். இவை வியாகுலக் கவிதைகள் தான்.

போரையும் போர்ப் பிரபுக்களையும் போர் அபிமானிகளையும் போர்ப் பிரபுக்களின் முன் செயலற்றிருந்த கிறிஸ்தவ மதகுருக்களையும் கருணாகரன் சாடுகிறார். அதேசமயம், போரிடும் இரு தரப்பிற்கும் இடையில் சான்ட் விச்சாக நசிபட்ட சாதாரண மக்களை அதிகமதிகம் பிரதிபலிக்க முற்படுகிறார். பொதுசனங்களின் வியாகுலமே பெரும்பாலான கவிதைகளில் வியாபித்து நிற்கிறது.

இப்பொழுது கேள்வி கேட்கலாம். கருணாகரன் கூறுவதைப் போல அது ஒரு சாவரங்கு தானா?

உண்மை.

அவை நரகத்தின் நாட்கள்தான்.

கடல் வழியாகவும் காடுகளின் வழியாகவும் பெருநிலம் சுற்றி வளைக்கப் பட்டது. விடுதலைப் புலிகளின் விநியோக வழிகளனைத்தும் அடைக்கப்பட்டன. ஆயுதங்களும் போதாது. ஆட்களும் போதாது. இலங்கை அரச துருப்புக்கள் கனரக எந்திரத் துப்பாக்கிகளை ரைபிள்களைப் போல வெகுசாதாரணமாக பயன்படுத்தின. அவற்றின் கொல்லும் தூரம் ஏறக்குறைய 3000 மீற்றருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாமல் இருந்தது. விடுதலைப் புலிகளால் அதிகம் பயன்படுத்தப்பட்ட ரைபிள்களின் கொல்லும் தூரம் ஏறக்குறைய 800 மீற்றர்தான். எனவே, எதிர்த்தரப்பின் கொல்லும் தூரத்துக்குள் நின்றே விடுதலைப் புலிகள் சண்டை செய்ய வேண்டியிருந்தது. சண்டை தொடங்கிய நாளிலிருந்து முடிவடைந்த நாள் வரையிலும் வேவு விமானம் ஒரு நிரந்தரமான துர்க்குறி போல வானில் தொங்கிக் கொண்டிருந்தது. வேவு விமானத்தின் ரீங்காரம் இரவையும் பகலையும் ஊடுருவிச் சென்றது. ஏறக்குறைய அது நான்காம் கட்ட ஈழப்போரின் பின்னணி இசையைப் போல் ஆகியிருந்தது. விநியோக வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருந்த நிலையில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் புலிகளால் வலிந்தேனும் திரட்டக் கூடியதாகவிருந்த ஒரே ஒரு வளம் மனித வளம்தான். முதலில் தலைப்பிள்ளையைக் கேட்டார்கள். மாவீரர் குடும்பங்களுக்கு விலக்கென்றார்கள். ஆனால் நிலம் சிறுக்கச் சிறுக்க அவர்கள் உருவாக்கிய விதிகளை அவர்களே முறித்தார்கள். ஒரு கட்டத்தில் வலுவுள்ள எல்லோருமே சண்டைக்கு வர வேண்டும் என்று கேட்டார்கள். இது ஏறக்குறைய பாஞ்சாலியைப் பணயம் வைத்துச் சூதாடிய மனோ நிலைக்கு ஒப்பானது. வெற்றியின் மீது பாண்டவர்களுக்கு இருந்த ஆகக் கடைசி நம்பிக்கையே பாஞ்சாலியை பணயம் வைக்கக் காரணமாகியது. விடுதலைப் புலிகளும் அப்படித்தான் நம்பினார்கள். பாண்டவர்கள் பாஞ்சாலியைத் தோற்றபோதும், பாஞ்சாலி துகிலுரியப்பட்டபோதும் ஆடை கொடுப்பதற்கு ஒரு கிருஷ்ணர் இருந்தார். ஆனால், நான்காம் கட்ட ஈழப்போரில் பாஞ்சாலிகள் துகிலுரியப்பட்டபோது பரமாத்மாக்கள் வரவில்லை. தப்பிச்செல்ல வழியற்றிருந்த ஜனங்களின் கேட்கப்படாத பிரார்த்தனைகள் குருடும் செவிடுமான உலகத்தின் மூடப்பட்ட மனச்சாட்சியின் கதவுகளில் மோதிச் சிதறின. ஒரு மரணப் பொறியை நோக்கி நாங்கள் எல்லோரும் மந்தைகளைப் போல சாய்த்துச் செல்லப்பட்டோம்.

அது ஒரு பிராந்திய மற்றும் சர்வதேச வியூகமாயிருந்தது. வன்னிக்குள் மற்றொரு வாகரையை உருவாக்குவதே அந்த வியூகத்தின் இறுதித் திட்டமாயிருந்தது. வாகரையில் விடுதலைப் புலிகளிடமிருந்து சனங்களை 'பிதுக்கி' எடுத்ததைப்போல முள்ளிவாய்க்காலிலும் சனங்கள் பிதுக்கி எடுக்கப்பட்டார்கள். அதாவது கடலிலிருந்து மீனை வடித்தெடுப்பதற்காக கடல் இரத்தச் சேறாய் ஆக்கப்பட்டது. இவ்வாறு சனங்கள் பிதுக்கி எடுக்கப்பட்ட ஒரு போர் அரங்கைப் பற்றித்தான் கருணாகரன் பேச முற்படுகிறார். ஆனால், முழுமையான ஒரு குறுக்குவெட்டு முகத்தோற்றம் எமக்குக் கிடைக்கவில்லை. ஈழத்துப் போரிலக்கியப் பரப்பில் நிலவிவரும் அதே உண்மையை விழுங்கும் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே இத்தொகுப்பும் வெளிவருகிறது. புண்ணிலிருந்து சிதளைப்போல சனங்களைப் பிதுக்கி எடுத்த ஒரு போர் அரங்கைப் பற்றிய முழுமையான ஒரு குறுக்குவெட்டு முகத்தோற்றத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைய முடியாத ஒரு சூழலிற்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய ஒரு பின்புலத்தில் சாவரங்கிற்கு ஒரு தரப்பை மட்டும் பொறுப்பாக்க முடியாது.

மேலும், ஒரு கவிஞராக கலை இலக்கியச் செயற்பாட்டாளராக சமூகத்தில் துருத்திற்கொண்டு தெரிந்த ஒருவர் தப்பிச்செல்ல வழியற்றிருந்த சாதாரண சனங்களில் ஒருவராக மாற நிர்பந்திக்கப்பட்டபோது ஏற்படும் ஆற்றாமை, நிராசை, இழப்பு, விரக்தி போன்றன பீறிட்டுக் கிளம்பும் எல்லா இடங்களிலும் கருணாகரனின் படைப்பாளுமை மிளிரக் காண்கிறோம்.

நம்பிக்கையின் சிதைவும், விசுவாசத்தின் முறிவும் அவருடைய கவிதையைச் செதுக்கிப் பளிச்சிடச் செய்கின்றன. நான்காம் கட்ட ஈழப்போரின் செமிக்கக் கடினமான உண்மைகளின் நிராகரிக்கப்பட முடியாத இலக்கிய ஆவணங்களாக அவை என்றென்றும் போற்றப்படும்.

ஆனால், இங்கேயுள்ள கேள்வி என்னவென்றால், கருணாகரன் வெறுமனே ஒரு கவிஞர் மட்டும் தானா என்பது. இல்லை. அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, அதற்குமப்பால் அவர் ஒரு கலை இலக்கியச் செயற்பாட்டாளர்.

ஈழப்போர் இலக்கியப் பரப்பில் 1991 இலிருந்து 27 ஆண்டுகளாக தொடர்ச்சியறாது செயற்பட்ட மைய ஆளுமைகளில் அவரும் ஒருவர். கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்துப் போர் இலக்கியப் பரப்பில் தவிர்க்கப்படவியலாத ஓர் இடை ஊடாட்ட மையமாக அவர் திகழ்ந்தார். அவர் ஒரு போராளியாக இருக்கவில்லை. முடிவெடுக்கும் அதிகாரங்களை பெற்றவராயிருக்கவில்லை. ஆனாலும் ஈழப்போர் இலக்கியத்தின் சிருஷ்டி கர்த்தாக்களில் அநேகமானவர்கள் அவரோடு ஏதோவொரு வகையில் ஊடாடியிருக்கிறார்கள். ஜனவசியமும் விருந்தோம்பலும் உறவுகளை கறுப்பு வெள்ளையாக கையாளாகாத ஓர் அணுகுமுறையும் அவரை தவிர்க்கப்படவியலாத ஆனால், உத்தியோகப்பற்றற்ற ஓர் இடை ஊடாட்ட மையமாக ஸ்தாபித்திருந்தன. தேசியவாதிகளானாலும் சரி எதிர்த்தேசிய வாதிகளானாலும் சரி அதிருப்தியாளர்களானாலும் சரி எல்லோருக்குமே அவரது வாசல் திறக்கப்பட்டிருந்தது. காலத்துக்குக் காலம் இடப்பெயர்வுகளின் போதெல்லாம் அவர் கட்டிய குடில்களுக்கு சத்ஜெய குடில், ஜெயசிக்குறு குடில்... என்றெல்லாம் பெயரிட்டார். ஒரு கால கட்டத்தின் படைப்பாளுமைகள் அனைத்தும் இக்குடில்களுக்குள் வந்து புழங்கி இருக்கின்றன. கை நனைத்திருக்கின்றன. ஈழப்போரிலக்கியப் பரப்பில் அவரையொத்த கலை இலக்கியச் செயற்பாட்டுக்காரர் எவருமில்லையெனலாம்.

இப்படியாக தனக்கென்றொரு நிராகரிக்கப்பட முடியாத ஸ்தானத்தைப் பெற்றிருந்த கருணாகரன் தனது கால் நூற்றாண்டு கால கலை இலக்கியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளின் முடிவில் நாலாங்கட்ட ஈழப்போரின்போது நம்பிக்கைகள் சிதைந்த ஒரு பாழ்வெளிக்குள் எப்படி வந்து சேர்ந்தார்? அவருடைய வார்த்தைகளிலேயே சொல்வதனால் அவர் ஏன் வரிசை குலைந்தார்?

அவர் கவிஞன் மட்டுமென்றால் அவரை நோக்கி இப்படிக் கேட்க முடியாது. கவிதை கட்டாயம் நம்பிக்கையில் முடியவேண்டும் என்றில்லை. அல்லது அது ஓர் அரசியல் ஆய்வாகவோ எழுச்சிப் பிரகடனமாகவோ முடியவேண்டும் என்பதுமில்லை. ஆனால், கவிஞன் ஒரு கலை இலக்கியச் செயற்பாட்டுக் காரனாக மேலெழும் போது சமூகம் அவனிடம் நம்பிக்கைகளைக் கேட்கின்றது. நம்பிக்கையின் தொடர்ச்சியை எதிர்பார்க்கிறது. அதிலும் குறிப்பாக இறுதி யுத்தத்தில் நரகத்தின் சிதளைப் போல பிதுக்கி எடுக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் ஊன்றிக்கொண்டு எழுவதற்கு நம்பிக்கை வேண்டும். படைப்பாளிகளும், ஆய்வாளர்களும், செயற்பாட்டாளர்களுமே அதைக் கொடுக்க முடியும்.

நமது காலத்தின் அரசியல்வாதிகளில் பலர் இடைமாறு காலகட்டத்தின் கோமாளிகள் ஆகிவிட்டார்கள். இலட்சியவாதிகளில் சிலர் ஓய்வூதியர்கள் ஆகிவிட்டார்கள். தமிழ்த் தேசியம் எனப்படுவது செயலுக்குப்போகத் திராணியற்றவர்கள் எடுத்தணியும் ஒரு மலிவான முகமூடியாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இப்பொழுது ஈழத்தமிழர்களிற்கு களத்தில் தேவைப்படுவது செயற்பாட்டாளுமைகளே. சிவில் செயற்பாட்டுக் குழுக்களே.

கலை இலக்கியச் செயற்பாட்டுக் குழுக்கள், பண்பாட்டுச் செயற்பாட்டுக் குழுக்கள், பெண்ணியச் செயற்பாட்டுக் குழுக்கள், ஊடகச் செயற்பாட்டுக் குழுக்கள், புலமைத்துவச் செயற்பாட்டுக் குழுக்கள், சட்டச் செயற்பாட்டுக் குழுக்கள், மருத்துவச் செயற்பாட்டுக் குழுக்கள் ஆகக் குறைந்தது ஆன்மீகச் செயற்பாட்டுக் குழுக்கள்... என்றிவ்வாறாக எல்லாத் தளங்களிலும் சிவில் செயற்பாட்டுக் குழுக்கள் தீவிரமாகத் தொழிற்பட வேண்டிய காலமிது. தமிழ்த் தேசியத்தின் சிவில் அடித்தளத்தைக் கட்டியெழுப்பிப் பலப்படுத்தினாற்தான்; ஈழத்தமிழர்கள் இறந்த காலத்தின் நற்கனிகளைப் பாதுகாக்க முடியும் வருங்காலத்தின் நம்பிக்கைகளை அடைக்காக்கவும் முடியும்.

இப்படியான ஓர் காலச்சூழலில், கருணாகரனைப் போன்ற, கால்நூற்றாண்டு கால கொழுத்த அனுபவத்தைக் கொண்டுள்ள கலை இலக்கியச் செயற்பாட்டாளர்களே நொந்து நூலாகிப்போயுள்ள எமது சமூகத்திற்கு மருந்தாக மாறவேண்டும். நந்திக் கடலிற்குப் பின்னரான ஈழத்துக் கலை இலக்கிய போக்குகளிற்கு முன்னோடிகளாகவும், வழிகோலிகளாகவும் மேலெழ வேண்டும். எழுதிய எல்லாப் பிரதிகளைவிடவும் வாழ்க்கையே மேலான அதிகாரபூர்வமான பிரதி என்பதை நிரூபித்துக் காட்டவேண்டும்.

மார்கழி 2012

**நிலாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை, இறுதி முத்தம், தண்டனை, உண்மை என்பவற்றுக்கான முகாந்திரம்

2007க்கும் 2009க்கும் இடைப்பட்ட ஈழப்போரின் இறுதிக் காலத்தில் எழுதப்பட்ட இறுதித் தொகுதிக் கவிதைகள் இவை. கண்ணீர், குருதி, சாவோலம், கையறு நிலை, தண்டனை, குற்றம், அதிகாரம் என்ற வாழ்வுக்கெதிரான அத்தனை நிலைகளும் யுத்தத்தின் போது தலைவிரித்தாடுகின்றன. அப்பொழுது இவை எல்லாவற்றின் வேரும் யுத்தத்திலிருந்தே தளைக்கின்றன. இவற்றின் விளைவுகளே இந்தக் கவிதைகள்.

அன்றிருந்த நிலையில் ஒரு வேகத்தில் இவற்றை எழுதினேன். சிலவேளைகளில் ஒரு நாளில் மூன்று நான்கு கவிதைகளைக் கூட எழுதியிருக்கிறேன். ஏராளமான கட்டுரைகளையும் பதிவுகளையும் கதைகள் சிலவற்றையும் கூட எழுதினேன். அந்த அளவுக்குக் கொந்தளிப்பாகவும் படைப்பு உந்துதலோடும் இருந்தது அன்றைய மனநிலை.

இவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளை எழுதப்பட்ட காலத்தில் அன்று வன்னியிலிருந்த கலாவண்ணனும் நிலாந்தனும் ப. தயாளனும் வே. பாலகுமாரனும் படித்தனர். இவற்றைச் சற்றுச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயத்தைச் சொன்னார் நிலாந்தன். இவற்றை வாசித்து மேலும் கொந்தளித்தார் பாலகுமாரன். அதேவேளை இந்தக் கவிதைகளில் சில அந்த நாட்களில் 'திண்ணை', 'வார்ப்பு', 'தாகத்தின் ஒளி', 'புல்வெளி' ஆகிய இணைய இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. இவற்றில் அதிகமானவற்றை த. அகிலனும் தீபச்செல்வனும் பதிவேற்றினர். கூடவே பிற தளங்களுக்கும் அனுப்பி வைத்தனர். "பேசமுடியாதவற்றைப் பேசுகிற படிமங்களோடு வருகிற உங்கள் கவிதைகளை அறிமுகம் கொள்வதில் மகிழ்ச்சி" (14.4.2008) என இந்தத் தளங்களில் வாசித்த தேவ அபிரா குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த மாதிரியான அபிப்பிராயங்களை சித்தாந்தன், யுவேந்திரா போன்றவர்களும் குறிப்பிட்டனர். ஒன்றிரண்டு கவிதைகள் 'வெளிச்சம்', 'ஈழநாதம்', லண்டனில் இருந்து வெளியாகும் 'காற்றுவெளி' ஆகியவற்றிலும் வெளியாகின. அன்றைய சூழலில் இந்தக் கவிதைகள் எல்லாவற்றையும் வெளியரங்கிற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வர வேண்டும் என்ற வேட்கையும் அவசியமும் இருந்த போதும் அதற்கான சூழல் அமையவில்லை. எனினும் பிரதீபா, தான்யா ஆகிய இருவரும் அதற்காகத் தொடர்ந்தும் முயற்சித்தனர். விளைவாக 'விடியல்' பதிப்பகத்தின் மூலம் இந்தக் கவிதைகளை வெளிக்கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். அதற்கான முயற்சியில் இவர்களோடு இணைந்து பாண்டிச்சேரி எம். கண்ணன் ஈடுபட்டார். ஆனால், கவிதைகளை முழுமைப்படுத்தி நூலுக்குரியவாறு கொடுப்பதில் எனக்கு ஏற்பட்ட சாத்தியமின்மைகள் வெளியீட்டைத் தடைப்படுத்தின.

என்ற போதும் எழுதப்பட்ட கவிதைகளை அன்றிருந்த நெருக்கடிச் சூழலிற்குள்ளும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தொடர்பிலிருந்த சில நண்பர்களுக்கு 2007, 2008 காலப்பகுதியில் அனுப்பிவைத்தேன். பிரதீபா, த. அகிலன், றுஷாங்கன், கி.பி. அரவிந்தன், ஹரிஹரசர்மா (ஹரி ராசலட்சுமி) குமரவேள், தீபச்செல்வன், மலர்ச்செல்வன் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். இதேவேளை இந்தக் கவிதைகளில் பெரும்பாலானவற்றைக் கணினி மூலம் பிரதியெடுத்தும் வைத்திருந்தேன். பின்னர் முகாமுக்கு வரும் போது ஒருவாறு அவற்றை அங்கே கொண்டு வந்து சேர்த்தேன். பிறகு அங்கிருந்து புவனசிங்காரன் மூலமாக சித்தாந்தனுக்கு அனுப்பிவைத்தேன். அது அப்படியே உட்சுற்றில் பல நண்பர்களின் வாசிப்புக்குச் சென்றது.

இதேவேளை, முன்னர் அனுப்பப்பட்ட கவிதைகளில் ஒரு தொகுதி, 2009 ஏப்ரலில் வெளிவந்தது. இதில் 50 கவிதைகள் உள்ளடங்கின. அது த. அகிலன், பிரதீபா, தான்யா, சயந்தன் போன்றோரின் முயற்சியிலும் கூட்டுச் செயலாலும் 'வடலி' வெளியீடாக 'பலியாடு' என்ற தலைப்பில் வெளியானது. ஆனால், 'பலியாட்டின் கண்கள்' என்றே அது வந்திருக்க வேண்டும். எதிர்பாராத வகையில் நண்பர்களின் கவனத்தையும் மீறி 'பலியாடு' என அமைந்துவிட்டது. 'பலியாடு' வெளியீட்டு வேலைகள் நடந்து கொண்டிருந்தபொழுது எவ்வளவோ முயற்சித்த போதும் என்னுடன் அவர்களாற் தொடர்பு கொள்ள முடியவில்லை. யுத்தம் எல்லாவழிகளையும் அடைத்திருந்தது. பிறகு, புத்தகத்தை அகதி முகாமில் வைத்தே பார்த்தேன். அன்றைய நிலையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் அந்தக் கவிதைகளை வெளியிட்ட நண்பர்களுக்கு என்றும் என்னுடைய நன்றிகள்.

மீதிக் கவிதைகளில் ஒரு தொகுதி 2010 டிசம்பரில் 'எதுவுமல்ல எதுவும்' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் வெளியானது. இதில் 56 கவிதைகள் இடம்பெற்றன. இந்தத் தொகுதிக்கான விமர்சனச் சூழலும் மனநிலையும் இன்னும் தமிழச் சூழலில் - இலங்கை மற்றும் புலம்பெயர் சூழலில் - உருவாகவில்லை என்றே நம்புகிறேன். ஏனென்றால், இதைப்போல யுத்தத்தை மையப்படுத்திய பா. அகிலனின் 'சரமகவிகள்' சேரனின் 'காடாற்று', றஷ்மியின் 'ஈ தனது பெயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து போனது', தானா. விஷ்ணுவின் 'கறுப்பு உருவம் சுமக்கும் ஆந்தைகள்' என்ற தொகுதிகளுக்கான விமர்சனங்களும் முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் அந்த நாட்களில் எழுதப்பட்ட கவிதைகளின் மூன்றாவது தொகுதி இங்கே வெளியாகிறது. இவை அனைத்தும் யுத்தம் நடந்த நிலத்திலிருந்து, அந்தச் சூழலில் இருந்து எழுதப்பட்டவை. சில கவிதைகள் பின்னர் அகதி முகாம் வாழ்க்கை, மீள்குடியேற்றத்தின் தொடக்கக் காலம் என்ற வரையிலும்.

இதேவேளை இன்னும் ஒரு தொகுதிக் கவிதைகள் தொலைந்துவிட்டன. அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கான எந்த வாய்ப்புகளுமே இல்லாமற் போய்விட்டது. சில கவிதைகளை மனனம் செய்து வைத்திருந்தேன். அவற்றையும் படியெடுத்து இவற்றில் இணைத்திருக்கிறேன். சில கவிதைகள் பாதியில் நினைவிலிருந்து அழிந்துவிட்டன. இன்னும் சில மனதிலேயே சிதைந்து போயின. போரின்போது அழிந்த பல்லாயிரம் விசயங்களோடு அவையும் சேர்ந்துவிட்டன. பலதையும் இழந்ததைப் போல அவற்றையும் இழந்துவிட்டேன்.

யுத்தத்தில் எஞ்சியவற்றைக் கொண்டே மிஞ்சிய வாழ்க்கையை வாழ வேண்டும் என்பது விதி. இங்கேயும் அதுதான் விதி. ஆனால், எல்லாவற்றுக்கும் அப்பால் போர் தருகின்ற அனுபவம் முக்கியமானது. அதனை மனிதர்கள் மறக்கவே இயலாது. இயற்கையின் அழிப்புகளுக்கு நிகரானவை மனிதர்கள் உருவாக்குகின்ற போரின் அழிவுகள். இயற்கையின் அழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிலிருந்து முடிந்தளவுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கும் விஞ்ஞான அறிவு பயன்படுத்தப்படுகிறது. அல்லது விஞ்ஞான அறிவு பயன்படுகிறது. ஆனால், மனித உருவாக்கமான போரின் அழிவுகளிலிருந்து தப்பிக் கொள்வதற்கு பரஸ்பரத் தன்மையுடைய அரசியற் சட்டங்களும் ஒழுங்கும் ஜனநாயகமும் அறமும் கருணையுமே வழியாகும். அந்த வழியின்பால் கவனத்தைச் செலுத்துவதே இந்தக் கவிதைகளின் தொனி. இந்தக் கவிதைகள் கொண்டிருக்கிற துயரம் அந்த வழியைக் குறித்த சிந்தனையைத் தரவேண்டும்.

இந்தக் கவிதைகளை வெளியிடும் கருப்புப் பிரதிகள் பதிப்பகத்திற்கும் நீலகண்டனுக்கும் முன்குறிப்பை எழுதியிருக்கும் நிலாந்தனுக்கும் நன்றி. இந்த நூலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் தோழர்கள் பானுவும் தமயந்தியும். அட்டையை வடிவமைத்துத் தந்திருக்கும் நண்பர் றஷ்மிக்கு எனதன்பு. எல்லா நண்பர்களையும் வாசகர்களையும் நினைவிற் கொள்கிறேன்.

**- கருணாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு

பார்க்கிறேன்
இலைகளால் கம்பளம் விரித்து
காத்திருக்கின்றன எல்லா மரங்களும்
பறவைகளுக்காக எப்போதும்

பறவைகள் வந்தமர
எல்லாக் கிளைகளும் நெகிழ்ந்து கொடுக்கும்
காதலும் நட்பும் அன்பும் கருணையும் பெருக.
மலர்களும் கனிகளும் கூட
பறவைகளுக்காகவே.

நிலத்துக்கும் ஆகாயத்துக்குமிடையில்
அந்தர வெளியில் நீந்திவரும்
பறவைகளை வரவேற்றுக் கொண்டிருக்கும்
மரங்களுக்குத் தெரியுமா
எந்தப் பறவை
எப்போது வந்து எங்கே அமருமென்று?

ஆனாலுமவை காத்திருக்கின்றன பறவைகளுக்காக

பறவைகளும் அறியுமா
எந்த மரத்தில்
எங்கே, எப்போது, அமருவதென்று?

ஆனாலுமொன்று
மூப்பென்றும் இளமையென்றும்
பார்த்து அமர்வதில்லை
எந்த மரத்திலும் எந்தப் பறவையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பறவை வந்தாலென்ன
விலகிச் சென்றாலென்ன
பறவைகளுக்காகவே காத்திருக்கின்றன
இலைக்கம்பளம் விரித்து ஒவ்வொரு மரமும்
இரவும் பகலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டுகளின் பேச்சுக் குரல்

தூங்கவில்லை நான் நூற்றாண்டுகளாய்.

போர்வையில்லாத இரவுகளில்
பெயரறியாத வழிகளில்
அழைத்துச் செல்லப்படும் ஒரு பெண்
பதற்றத்திலும் நிம்மதியின்மையிலும்
தன் நூற்றாண்டுகளை இன்னும் எதுவரையில்
அவ்வாறு கரைப்பது?

இருண்ட பதுங்கு குழிகளில்
நாற்றமெடுக்கும் சவக்குழிகளில்
மரணத்தின் நாற்றமும் அதன் நிழலும் நிரம்பிய முற்றங்களில்
போர்க்குதிரைகளின் காலடியில் சிக்கி
நொருங்குண்ட சருகுகளினடியில்
ஒரு துளியில் ஆரம்பித்து
திசைகளெல்லாம் பெருகியோடும் குருதியில்
என் காலத்தை
இன்னும் நான் எவ்வாறு வைத்திருப்பது?

எனது கனவுகள்
நூற்றாண்டுகளின் அகாலத்திலா?

ஒரு முள்ளில்
சிக்கிக் கொண்ட வரலாற்றை
எதுவரையில் கொண்டலைவது?

மயானத்தின் நடுவே
ஓயாதொலிக்கும் அழைப்பு மணி
என்னிரவுகளை திறக்கிறது குருதி பீறிட அதிரடியாய்.
வாய் புலம்பும் குழந்தைகளை என் செய்வேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாயக் குழிகள் நிரம்பிய
வீதிகளைக் கண்டு ஒவ்வொருவரும் அச்சப்படும்போது
வீடு எல்லோரையும் காட்டிக் கொடுக்கும் போது
சணற்புதர்களினடியில் நான் தஞ்சமடைந்தேன்.
இந்த நிலையில் காலையில்
வானத்தில் வரவும் அஞ்சுகிற
சூரியனைக் கொண்டாடுவதெப்படி?

இருள்
முடிவற்ற இருள்
பிணவறையின் மணம் நீங்கவேயில்லை
சாவுப்பட்டியல் என்னைச் சுற்றி வளைக்கிறது.

வீரக்கனவுகள் ஒவ்வொரு வீட்டிற்கும்
மரணத்தைப் பரிசளிக்கும் போது
நான் ஒரு சப்பாத்தினுள் நசிந்து கிடந்தேன்.

பனை மரத்தின் மூச்சு
என்னை உசுப்பியெழுப்புகிறது
இது நள்ளிரவா அதிகாலையா
எதுவும் புரியவில்லை
இன்னும் இந்த இருள்
எவ்வளவு தூரம் என்றும் தெரியாது

நான் தனித்து விடப்பட்டவளா
வஞ்சிக்கப்பட்டவளா
அயற்குரல்களும் எனக்கு ஆதரவளிக்கவில்லை
அழகிய கடற்கரைகளில்
சிதறிக்கிடந்த பாடல்கள்
மீன் வாசம் நிரம்பிய காலத்திலிருந்து
வேறொரு அம்பாக் காலத்துக்குப் போகத்
துடித்துக் கொண்டிருக்கின்றன

வயல்களில் மீந்திருக்கும்
நெல்மணிகளை
இன்னொரு பருவகாலத்துக்குப்
பரிசளிக்க விரும்புகிறேன்

எரியும் இந்தப் பாழ் நெருப்பில்
எல்லாவற்றையும் ஆகுதியாக்கிவிட முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதம் இந்த முடிவுறாத தீயை அணைப்பது?
இல்லையெனில்
நேசமிக்க ஒரு குளிர்க்கை
வாரியணைக்கும் வரை
இந்த நூற்றாண்டுத் துயரம் முடிவுறாது

அதுவரையில்
இந்தப் புண்ணிலிருந்து
தானியத்தை எவ்விதம் விளைவிப்பேன்?
இந்த நூற்றாண்டுத் துயரை
திசை முழுதும் தொங்கும் திரையிலிருந்து
எவ்வாறு அகற்றுவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களத்தின் பரிசு

இன்றும் மயானத்திலிருந்து திரும்பியவுடன்
இன்னொரு சாவுச் செய்தி வந்து அழைக்கிறது
"மறுபடியும் மயானத்துக்கு வருக" என்று.

சாவு களை கட்டிய மயானத்தில்
ஊரின் வெறிச்சோடிய முகத்தைக் கண்டேன்
போரை வெறுத்தவனும்
போருக்குப் பலியானான்

அவனையும் வீரர்களாக்கினார்கள்

பலி மிகுந்த நாட்களில்
மரணத்தின் கூவலை
எடுத்து வரும் "பத்திரிகை"யில்
தங்களின் முகங்களை கண்டதிர்கிறார்கள்
ஒவ்வொருவரும்

வீதியில், எங்கே போவதென்று தெரியாமல்
தயங்கி நிற்பவரை
அழைத்துக் கொண்டு போகிறது சவ ஊர்வலம்.

மறுபடியும் மறுபடியும் மயானத்துக்கு வரும்
இந்த நாளில்
இதயத் துடிப்பொலியின் எண்ணிக்கை
சராசரியிலில்லை.

போர்க்களத்தின் பரிசு
சாவழைப்பைக் கொண்டு வருகிறது எப்போதும்
எல்லா வீதிகளிலும்
எல்லா வீடுகளிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரும் வீரரில்லை
சாவுக்காகக் காத்திருக்கும் வாழ்வின் முன்னே"
என்று நான் சொன்னேன்

"வீரனுக்கு வாழ்வுமில்லை
போதையைத்தவிர"
என்று யாரோ சொன்னார்கள்

தினமும் பெருகியபடியிருக்கும் சாவுகள்
யுத்தத்தின் நெடியை வீசுகின்றன குரோதமாய்.

யுத்தத்தின் அழைப்பை
நிராகரித்து வெளியேறுகிறது ஒவ்வொரு சாவும்.

மரணத்தின் இறுதிப் பெருமூச்சில்
செத்தவரின் குரல் பதறிக் கொண்டிருக்கிறது
இந்தச் சாவுகளின் முடிவிலி நிலையை எண்ணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிசை குலைதல்

கடக்க முடியாத விதிகளில்
புதையுண்டிருக்கும் நிகழ்காலம்
ஒவ்வொருவரிடமும் திணிக்கிறது கொலை வாளினை
நான் ஏற்கவில்லை எந்த வாளினையும்
அவனும் விரும்பியதில்லை எந்த வாளையும்;
இன்னும் எந்தக் கொலையையும்
கொலைக்காக வழங்கப்படும் பரிசுகளையும்
ஆயினும் நாங்கள் கொலையாளிகளாக்கப்பட்டோம்.

கண்மூடித்துயிலும் இந்தக்காலத்தின் அத்தனை சாட்சிகளும்
எங்களைத் தண்டிக்கின்றனவா?
பிராந்திய நலன்கள்
சர்வதேச வியூகங்கள்
உள்ளூர் விவகாரங்கள் என்ற விதிகளின் கீழும்
அவற்றின் நலன்களின் வழிகளிலும்
நமதுடல்கள் பலியிடப்படுகின்றனவா?

எதற்காக இந்தப் பலிகள்?
எதற்காக இந்தத் துயரங்கள்?
இதன் முடிவுப்புள்ளிதான் எது?
ஒரு உயிரைக் கொடுத்து
இன்னொரு உயிர்வாழும்
விதிமுறை வந்த போது
நமது வழிகள் புதைகுழிகளாயின
நமது பயணத்திசை பாழ்நிலம் நோக்கியது

அவர்களது அந்தரங்கத்தில் படிந்துள்ள பழி நினைவுகள்
எல்லோரையும் கொண்டு வந்து நிறுத்துகிறது
முடிவற்ற சாவின் விளிம்பில்
பாழடையும் காலத்தில் நின்று கூவுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவல்ல நமது வழி
இதுவல்ல நமது பயணத்திசையும்.

காட்டிடை வேகி வெந்துருகும்
எனதருமைத் தோழரை எவ்விதம் காப்பாற்றுவேன்?
அத்தனை கடவுளரும் பிரார்த்தனைகளை விட்டு விலகினர்
அத்தனை நண்பர்களும் கைகளை விரித்தனர்
ஆறுகள் வரண்டு
காடுகள் தீய்ந்து
புகை மூடிய இந்த நாட்களில்
நாங்கள் கொலையாளிகளாக்கப்படும் இந்த நாட்களில்
வரலாற்றின் திசைகளெங்கும்
கனத்த மௌனத்தின் திரைகளே தொங்குகின்றன.

என்னால் முடியவில்லை வலி பெருகும் இந்த நிலத்தில்
சாட்சியாகவும் கொலையாளியாகவும் நிரபராதியாகவும்
முடிவற்றுக் கிழிபட்டுக் கொண்டிருக்க.

தன்னிலமே தன்னை விழுங்கும் நாட்களில்
நிகழ்காலத்தை இழந்த பிறகெவ்விதம்
எதிர்காலத்தின் முளைகள் உயிர்க்கும்?
என்றறியா மூடரெல்லாம் நம்மை ஆண்டு நடத்துகிறார்.

கொலை நுகம் என்தோளில் ஏறுகிறது.

நான் வரிசை குலைகிறேன்
ஒரு நீரூற்றுத் தேடி.

விலகிய மந்தைக்கு தனித்த திசையே வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயே வைத்திரு அவற்றையெல்லாம்

ஒரு அறிவுரை வந்தது
எல்லாம் சரியாகும்
நம்பிக்கையோடிரு என்று

ஒரு கட்டளை வந்தது
எதற்கும் எப்போதும் அஞ்சாதே யென்று.

ஒரு அழைப்பு வந்தது
எல்லாவற்றுக்கும் பொறுமையின் மீது உட்கார்ந்திரு என்று.

ஒரு எச்சரிக்கை வந்தது
எந்த நிலையிலும் அமைதியையே காக்கும்படி.

ஒரு கோரிக்கை வந்தது
எல்லாவற்றையும் துறந்துவிடு என்று.

எல்லாவற்றோடும் எல்லாமுமாக இருந்தேன்
ஏதொன்றும் ஆகாத போதும்.

இவையெல்லாம் எங்கிருந்து வருகின்றன?
யாருக்காக வருகின்றன?
எதற்காக வருகின்றன?
என்றறெல்லாம் தெரிந்தபோதும்.

இவையெல்லாவற்றையும் வைத்துக்கொண்டு
என்னை மென்மை விட்டு விடுங்கள்
என் வழியில் ஒரு நத்தையாகவோ
ஏறும்பாகவோ சென்று விடுகிறேன்
ஏன் மனிதனாகக்கூடத்தான் என்றேன்.

அதற்கும் அனுமதியிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தைப்பின்னிழுத்துச் செல்லும் பாம்பு

காலத்தைப் பின்னிழுத்துச் செல்லும்
ஒரு பாம்பு
எங்கள் நகரத்தை சுற்றி வளைத்தது.

ஒவ்வொரு வீட்டிலும் அதன் விச நாவுகள்
மிகப்பயங்கரமாகவே வளர்ந்து கொண்டிருந்தன
சவப்பெட்டியின் வடிவங்களில்.

வழுவழுப்பான அதன் உடலையும் கண்களையும்
புகைப்படமாக்கி வைத்திருந்தார்கள் நகரத்தின் அதிகாரிகள்.
அவர்களுக்கு அந்தப்பாம்பு
எப்போதும் தீராத அச்சுறுத்தலாக இருந்தபோதும்
அவர்கள் அதனையே செய்தார்கள்
கடமையின் நிமித்தமாக.

எதிர்காலத்தின் கண்களில்
இருள் நிரம்பிய பூட்டைத் தொங்கவிடும்
வழுவழுத்த பாம்பை
கொல்ல நினைத்த போதும் யாராலும் முடியவில்லை.

அது பாம்பென்பதால்
சிலபோது அது சீறியிருக்கிறது
சிலபோதோ அது படமெடுத்தாடியிருக்கிறது
சிலபோது சிலரை அது தீண்டியுமிருக்கிறது
என்பதால் யாரும் அதனை விலகினார்கள்

பாம்புக்கு அஞ்சியே இருந்தனர் எல்லோரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு
தன்னகங்காரத்தின் தினவு கொண்டு
நகரத்தை தன் நிழலில் படுக்க வைத்தது

பாம்பின் விசமூறிய நகரத்தில்
தினமும் சனங்கள் செத்துக் கொண்டேயிருக்கிறார்கள்
காலம் பின்னகரப் பின்னகர.

காற்றிலாடும் கொடியின் நிழலில்
அசைகிறது பாம்பின் உடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற்காலம்

மறுபடி
எப்போது திறபடுமெனத் தெரியாது
தாழ் கொண்டன கதவுகள்

இறுதிப்பாங்கொலியை மழை கரைத்தது
அன்று
யாழ்ப்பாணத்தில் தகித்து விரிந்தது
கொடும் பாலை

*"யாழ்ப்பாணமே*
*ஓ*
*யாழ்ப்பாணமே!"*

விடை பெற முடியாத விழிகளில்
எழுந்த கேள்விகளை
எதிர்கொள்ள முடியாத தலைகள் கவிழ்ந்தன

விம்மினேன்
குலுங்கும் மார்பை தாங்கிட முடியவில்லை

போனீர்
விடையற்றுப் போனீர்
விடை பெறாமலே போனீர்
துரத்தப்பட்டவர்கள் எங்ஙனம் விடைபெறுதல் இயலும்?

கதறியழவும் விதியற்ற எங்கள் வழியில்
இருள் பெருகி வானத்தை மூடியது
எந்த நட்சத்திரமுமில்லை
பிறை நிலாவும் போய்த்தொலைந்தது எங்கோ.

தோய்த்துலர்த்தக் கொடியிலிட்ட துணிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க விதியில்லை.
நினைவைப் பொதிந்து
சுவரிலிட்ட வாப்பாவின் படத்தை
உம்மாவின் கைத்தடியை
தொழுகை மண்டபத்தில் வைத்த
"குர் ஆனை" விட்டுத் துரத்தப்பட்ட நாளின்
குரல்கள் கரைந்தன கொட்டிய மழையில்.

ஆளற்ற தெருக்கள்
மூடப்பட்ட பள்ளிவாசல்கள்
திறந்தபடியேயான வீடுகள்...

"போய்வருக" என்று சொல்ல ஒரு குரலுமில்லை
தொண்டைக்குள் சிக்கியது
நம் காலக் கொடு முள்

கவிழ்ந்தது என் தலை
நூறாயிரம் முறை.

அன்று வானில்
நட்சத்திரங்களில்லை
நிலவுமில்லை
பகலில் சூரியனுமில்லை.

போனீர்
சாட்சிகளின் கண்கள் மூடியிருந்த வானத்தின் கீழே
தண்டனைக் காலத்தின் சுமைகளைக் காவிக் கொண்டு
"யாதொரு பழியும் செய்திலோம்
அல்லாவே..." என்ற குரல் போய்த் தேய்ந்தது தொலைவில்
ஆயிரமாயிரம் கேள்விகளோடு...
ஐயகோ...

"அஞ்சற்க தோழ
விடுதலை வெளியில்
உம் கால் பதிகிறது
போய் வருக
வராத காலமொன்றென்றில்லை
வரலாற்றின் விதியில்..." என்று மண்ணில் எழுதி மனதிற் புதைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் காலம்

மறுபடியும்
எப்போது திறபடுமெனத் தெரியாது
தாழ் கொண்டன கதவுகள்.

இம்முறை
கைதிகளானோம் நாமெல்லாம்
பாங்கொலியில்லா விதியாற்றிய
முன்னை வினை சூழ் காலத்திருள்
வந்து முன்னே விரிகிறது சர்ப்ப வியூகமாய்.

போக வழியில்லை எங்கும்
போகாதிருக்கவும் விதியில்லை.

நிழல்களின் மேலே
மரங்கள் முறிந்து வீழ
விரிகிறது பாலை
வருகிறது கோடை

என்னால் முடியவில்லை
பாம்புகள் ஊரும்
இவ்விரவை அள்ளித்தின்ன
வன்னியே ... ஓ
வன்னியே!

கவிழ்ந்த தலை நிமிரவில்லை
விம்மும் மார்பை
எங்ஙனம் ஆற்றுவேன் இவ்விரவில்?

நம் தொண்டைக்குழியில்
சிக்கிய முள்
தூண்டிலிடுகிறது நம்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ தண்டனைக்காலத்தின்
வியூகத்தில் சிக்கிய
கைதிகளின் கவனிக்கப்படாத புலம்பல்
பாலை வெளியில் அலைகிறது தனித்து.

நினைவிலெழுகிறது
அன்று உம் விழிகளில் எரிந்த
அழியாச்சுடர்
அந்த விழிகளில்
எழுந்த கேள்விகளை
எதிர்கொள்ள முடியாத் தலைகள் கவிழ்ந்தன

கவிழ்ந்த தலைகள் இன்னும் நிமிரவேயில்லை

அந்த நெருப்பு நம் காலடியில்
தணல் பூத்துக்கிடக்கிறது
உள்ளே சுவாலை கொள்ளத் துடித்தவாறு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழியற்றவனின் சொற்கள்

பெருந்தோல்வியின் அடிவாரத்தில்
தண்டனைக்காலம் தொடங்கிவிட்டது
“விடுதலையின் வழிகள்
விடுதலை பயக்கும்” என்று சொன்ன ஞானியே
பணிகிறேன்
மன்னித்துக்கொள்ளும்.

அடோனிஷ்!
என்வாயும் இப்போது என் வாயாக இல்லை
எனது நாட்களும் என்னுடையவை அல்ல
பெய்ரூட் நகரத்தெருக்கள் வன்னியிலும் முளைத்தன.

பழிக்கும் காலத்தில்
எந்த வழியுமற்ற ஒரு வெள்ளாடாய்
ஊரும் ஒரு பிராணியாகி விட்டேன்.
நண்பர்கள் எல்லோருக்கும்
எனது சொல்லைத்தருகிறேன்
என் தண்டனைக்காலத்தின் சொல்லை
என்றோ நான் சேமித்துத் தரமுடியும்.
முடியாத போது
எனது சொல்லைக் கலைத்து விடுங்கள்
அதன் வழிகளில் அது போகட்டும்
எந்தக்கட்டுமற்று
எந்த அடையாளமுமற்று
அதன் திசைகளில் அதன் சுதந்திரத்தோடு.

இறந்தவனை விட்டு நிழல் தங்குவதில்லை
என்பதை எனது சொற்கள் அறியும்.

நான் விடைபெறவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனபோதும் ஆனபோதும்
தேங்கித் தவிக்கும் இந்தச் சொல்லை
எப்படி உங்களிடம் தருவேன்?

சுற்றி வளைக்கப்பட்ட நிலையிலிருக்கும்
கைதியான சொற்களை
தண்டனைக்காலத்தின் வலியுடைய சொற்களை
குற்றம் சாட்டப்பட்டவனின் தணிந்த குரலுடைய சொற்களை
மறைத்து வைக்க முடியவில்லை
அவற்றின் பெருகும் ஒளியை கட்டுப்படுத்தி.

வாசனையுடைய அந்தச் சொற்கள்
எல்லா விதிகளையும் கடந்து
என்னைக் கொண்டு வரும் உங்களிடம் என்றறிவேன்.

வழியற்றவனின் சொற்கள்
காலங்களையும் பருவங்களையும் கடந்து போகிறது
திக்கற்றுத் திசையற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்க்கினை

இனியும் யாரும் வரவேண்டாம்
போதும் இந்த ஆய்க்கினைகள்

அம்மா, ஈரத்தின் வாசனையை
கடல் தர மறுத்த போது
ஆறும் குளமும் தங்களுடலில்
இரத்தத்தின் வெம்மையையும்
கண்ணீரின் சூட்டையும் ஏற்றபோது
எங்கள் பாதைகளில்
இருள் உறைந்தது அழுகுரல்களின் வேர்களில்.

போர் விரும்பிகள்
குதிரைகளையும் ஆயுதங்களையும்
போர் வீரர்களையுமே
தங்களின் கனவில் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர் மனமுட்கள் குவிந்து
எல்லாப் பாதைகளும் அடைபட்டாயிற்று

அமைதியற்ற குருவி
தன் இரையை எங்கே தேடுவது?
குருதியோடும் மண்ணில்
விளைந்து கொண்டிருக்கும் புழுக்களுக்கிடையில்
வரலாற்றின் முகம் குரூரமடைகிறது
தோற்று விழும் குதிரையின் முகத்தோடு.

வாழை மரங்களால் அலங்கரிக்கப்பட்ட
தெருக்களில் ஒலிக்கும்
சாவுப்பாடலுக்கு இறுதி அஞ்சலியை யார் செலுத்துவது?
தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி சொல்லியழுத பெண்கள்
மூர்ச்சையற்றுப் போய்க்கிடக்கிறார்கள்
ஒவ்வொரு வீட்டிலும்.

தியாகிகளின் பட்டியலை
யாரோ வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்
அந்த "வானொலி"யில் வரும் செய்திக்கு
யாராலும் ஏற்கப்படாத மரியாதைக்கு
எந்த நிறமுமில்லை.
அது எல்லோருடைய காலடியிலும் கிடந்து நசிபடுகிறது
வன்மத்தின் ஊனம் கசிய.

வீரம் விளைந்ததாக நம்பப்படும் நிலத்தில்
நீங்கள் விலக்க முடியாத முகங்களில்
அழுகுரல்கள் விளைகின்றன.

எதிர்காலம் குறித்த ஒரு சொல்லை ஏற்கமுடியாத வீரத்தின் முன்னே
நான் எறிவேன்
நாயின் மலத்தை இந்த வரலாற்றின் விதி முன்னே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலன் மறுப்பு

புண் நாறிப் பழுத்த காலத்தில்
புலன்களுக்கு விதிமுறைகள் வந்தன
அவர்களிடம் வாய்மட்டுமே இருந்தது
பலருக்கும் காதுகளே அனுமதிக்கப்பட்டன.

அவர்கள் பேசுவதற்காகவே படைக்கப்பட்டிருந்தார்கள்
நாங்கள் கேட்பதற்கே அனுமதிக்கப்பட்டோம்.

ஐம்புலன்களும் யாருக்கும் தேவையில்லை
என்றொரு விதி வந்தபோது
எல்லோரும் மௌனத்தைக் கொடுத்து
அதை வரவேற்கும்படியாயிற்று
அதன்பிறகு
அந்த விதிக்கு எல்லோரும்
விருந்தாகிப் போனார்கள்.

எல்லோருக்கும் தெரிந்த சங்கதிகள்
இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன
பிணங்களின் நடுவில்..

எப்போதும் பிணங்களை ஆராதிப்பதே
ஒவ்வொருவரினதும் பொறுப்பான செயல்
என்ற விதி எழுதப்பட்டுள்ளது
சேற்றில் விழுந்து நாறும் நாட்களின் மீது.

தோல்வியும் அவமானமும் சுற்றிவளைத்த போதும்
எல்லோருடைய குரல்வளையிலும் நெருப்பு மூண்டபோதும்
யாரும் அதைக்காட்டிக் கொள்ளவேயில்லை.

ஆறாவது விதியும் நூறாவது விதியும்
உறைந்தது ஒருசிறு வினையற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவக்குழியில்.

எதற்கும் பெறுமதியில்லை
யாருக்கும் மதிப்பில்லை
உனக்குத் துப்பாக்கியைக் கையாளத்தெரியுமா
அந்த வித்தையை அறிந்தவர்கள்எதுவும் செய்யலாம்.

இதோ மகுடம்
சூடிக்கொள்ள முதல்
உன்னுடைய விசுவாசம் குறித்து நிரூபித்துக்கொள்.

விவசாயிகளுக்கு பயிரிடுவதைத் தவிர வேறெதைத்தான்
தெரியும்?
மருத்துவர்களுக்கு நோயைவிட்டால் வேறு கதிதானென்ன?
கடலோடியிடம் கடலின் ஞாபகங்களைத்தவிர
வேறெது தானுண்டு?
உத்தியோகத்தர்கள் சனங்களையும் விதிகளையும் வைத்துக்
கொண்டு
என்னதான் செய்ய முடியும்?

துப்பாக்கியோ எல்லாவற்றுக்கும் மேலானது
யாரையும் நிறுத்தவும் இயக்கவும் முடிந்த
அதன் விசையில்
எல்லாவற்றுக்கும் மேலான அதன்
பேருருவில்
உனது வரலாறும் நிகழ்காலமும் அடக்கம்.

இதோ
புலன்களுக்கு விடுதலையளிக்கும் ஒரு கருவியைக்
கொண்டு உங்களின் சுதந்திரத்தை அறியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவை, இறுதி முத்தம், தண்டனை, உண்மை என்பவற்றுக்கான முகாந்திரம்

மாம்பூக்கள் நிரம்பிய முற்றத்தில்
இன்று கோலமில்லை
கண்ணீர்த்துளிகளைப் பெருக்கிய காலையில்
ஒரு மூடப்பட்ட சவப்பெட்டி
கடக்க முடியாத நிழலாய்
சாட்சியாய் வைக்கப்பட்டிருக்கிறது
எனக்கும் உங்களுக்குமிடையில்.

ஓலங்கள்
அழுகை
கோபம்
வசைகள்
மன்னிப்பில்லை
மகிமையில்லை
பெருந்துக்கத்தின் முன்னே
எல்லா வேஷங்களும் களையப்படுகின்றன
அவர்களை அழவிடுங்கள்
அவர்கள் வசைபாடட்டும்.
அவர்கள் அப்படித்தான்
உண்மையைப்பேச விரும்புகிறார்கள்.
உண்மையைப் பேசுவதற்காக
ஒரு உயிரைக் கொடுத்தே ஆகவேண்டியிருக்கிறது
அதுவும் இந்தக்கணத்தில் மட்டுமே
அவர்களால் அப்படிப் பேசமுடியும்.

திறக்கப்படாத சவப்பெட்டியில்
ஒரு சாவியுண்டு
அதுதான் இப்போது உண்மையைத்திறக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கு மேடையில் வைக்கப்பட்ட வாக்கு மூலம்

எனக்குச் சாட்சியங்களில்லை
நிம்மியுமில்லை
இதோ எனக்கான தூக்குமேடை
இதோ எனக்கான சவுக்கு
நான் குற்றமிழைக்கவில்லை என்றபோதும்
தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது
இன்னும் நேரமிருக்கிறது
இன்னும் நேரமிருக்கிறது
உண்மையைக்கண்டறியுங்கள்
தயவுசெய்து கண்டறியுங்கள்
அதன்பிறகு என்னைப்பலியிடுங்கள்
அதற்காக நான் மகிழ்வேன்
உண்மைக்காக என்னைப்பலியிடத்தயாராக இருக்கிறேன்.

அதுவரையில் நான் சாட்சியாக இருக்க விரும்புகிறேன்

நல்ல நம்பிக்கைகளைஉங்களிடம் சொல்வேன்
எதுவும் பெரியதில்லை எதுவும் சிறியதுமில்லை

நான் யாருக்கும் விரோதமாக இருந்ததுமில்லை
எந்த விசமும் படர்ந்ததில்லை என் நிழலில்.

உண்மையைக் கண்டவன் அதைச் சொல்லாதிருப்பது
மாபெரும் பாவச் செயலாகுமல்லவா
தண்டனைக் குரிய தல்லவா

எனவேதான் உண்மையைச் சொன்னேன்
பாவங்களும் தண்டனையும்சேராதிருக்கும்படியாக
அதையே நான் செய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையே நான் செய்தேன்
இதில் உங்களுக்குண்டா பேதங்கள்?

நான் உங்களில் ஒருவன்;
அன்பின் கூக்குரலை நான் ஒலித்தேன்
நாம் தோற்கடிக்கப்படலாமா
என்னைக் கோவிக்காதே என்னைக்கோவிக்காதே

நான் சொல்வதைக்கேள்
நான் சொல்வதையும் கேள்

உண்மைகளை நாம் ஒரு போதும் அழியவிடலாகாது
உண்மைக்குச் செய்யும் அவமானம்
நம்மைத் தூக்கு மரத்தில் நிறுத்தும்.

நமது நாக்குக்கசக்கிறது
நமது கால்கள் வலிக்கின்றன
நமது வயிறு கொதிக்கிறது

என்ன செய்ய முடியும்
அவற்றுக்கு
மன்னிப்பா
ஆறுதலா
தண்டனையா?

காலத்திடம் சொல்லு
இன்னும் இன்னுமாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகாலம்

இந்தத்தலையைக் கிள்ளியெறியுங்கள்
அவமானங்களைச் சகிக்க முடியாது.
இனியும்
முட்டாள்தனங்களுக்காகவும்
கோழைத்தனத்துக்காகவும்
உயிரும் குருதியும் நான் தரவேண்டுமெனில்
இதோ என்னுடைய தலை.

போகட்டும்
மிச்சமிருக்கும் துயரமெல்லாம்.

நெருப்பையும் ரத்தத்தையும்
இன்னும் நினைவிற் சேமித்து வைத்திருக்க முடியுமா?
அவமானங்களால் நிரம்பியிருக்கும் துயருக்குள்
சிதைந்த சொற்களின் ஓலத்தோடு
துடித்துக் கொண்டிருக்கிறது நிராகரிக்கப்பட்ட இதயம்.

கண்ணீருக்குள் மிதக்கின்றன
சொல்ல முடியாது தத்தளிக்கும் உண்மையும்
வெல்ல வழியற்ற காலமும்.

இந்த வெயிலில்
மழைக்காக காத்திருக்கும் செடிகளிடமும் புற்களிடமும்
இலையுதிர்ந்த மரங்களிடமும்
என்னுடைய ரகசியங்களைப் பகிர்ந்துள்ளேன்.

அந்த ரகசியங்களில்
வெளிப்படையாகப் பேசுவதற்கிருந்த
நாலு வார்த்தைகள்
சூரிய ரேகைகளாய் ஒளிரும் அன்பின் துளிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக முடியாத நாறமுடியாத உண்மையின் குருதி,
அபாயங்கள் சூழும் எதிர்காலத்தைக்கடந்து போவதற்காக
துலங்கிய சிறு வழி
என்று மிகச் சிலவேயிருந்தன.

என்றபோதும்
அதைப்பகிர்வதற்கு யாருமேயில்லை.

என்னிடம் முகமூடிகள் செய்யும் நுட்பமில்லை
அதனால்
நண்பர்கள் அந்நியர்களாகிவிடுகிறார்கள்
அல்லது பகைவர்களாகி விடுகிறார்கள்.

ஆடுகள் கோழிகள் பன்றிகள் மாடுகள்
மனிதர்கள்
எல்லாமும் ஒன்றென்றே மதிப்பீடு செய்யப்படுகிறது.

உன்னிடம் எது இருக்கிறது என்பது முக்கியமல்ல
நீ யாதாயிருக்கிறாய் என்பதுமல்ல
உன்னிடம் முகமூடிகளுண்டா
கவசங்களுண்டா
நீளமான நாக்கும் வளையக் கூடிய முதுகும் உண்டா
தோத்திரங்களும் வழிபாட்டுச்சூத்திரங்களுமுண்டா
என்பதே எதிர்பார்க்கப்படுகிறது.

அவமானப்படுத்தல்களால் நிரம்பிய தலையை
எடுத்துவிடுங்கள்

கூனல் முதுகு இல்லையென்பதற்காகவும்
தொங்கும் நாக்கில்லாமற்போனதற்காகவும்
மாற்றாகத் தருகிறேன் அதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலி

பீரங்கிகளை அதிகம் நம்பும் நாட்களில்
உலர்ந்து போகின்றன
எல்லா வார்த்தைகளும்
எல்லாக்கனவுகளும்

இப்போது
ஒரு சொல்லுக்கும் மதிப்பில்லை
கண்ணீர் மிக்க ஒளியுடையதாகக் கண்டேன்
மண்டியிட்டழுகின்றேன் பீரங்கியின் முன்னே
வெட்கம்தான் என்றபோதும்.

யாரையும் காப்பாற்ற முடியவில்லை
யாருடைய கண்ணீரையும் துடைக்கவும் முடியவில்லை
கண்முன்னே
பலிடப்படுகின்றன கனவுகளும் நம்பிக்கைகளும்.

பொறிகளின் மேல் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது
குழந்தைகளுக்கான விளையாட்டுத்திடல்
உடைந்து விழுகிறது பாலம்.

பீரங்கிக்கில்லை இதயமும் கருணையும் என்றறிந்தபோதும்;
மண்டியிட்டழுகிறார்கள் முதியபெண்கள்.

என் செய்வேன்
என் செய்வேன்?

முள்முருக்க மரங்கள் பூத்துச் சொரியும்
ஒழுங்கையில் போகிறாள்
வசைகளோடு ஒரு பெண்
அவளைத் துயிலுரிந்த நிகழ்காலம்
பைத்தியக்காரியாக்கவும் துடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீரங்கி அவளைத் தோற்கடித்து விட்டது.

பைத்தியக்காரர்களின் கூடாரத்தில்
நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பீரங்கி
தோற்கடித்து வருகிறது எல்லோரையும்
சிதைந்த நாட்களைக் கூட்டியள்ளி
சிதையிலேறு எல்லாம் முடிந்ததென்று.

பீரங்கிகளை அதிகம் நம்பும் காலத்தில்
புலன்கள் கல்லறைக்குள் வைக்கப்படுகின்றன
உயிரைச் சிலுவையி லறையுங்கள்
இல்லையென்றால் கண்ணீரில் கரைத்து
பதுங்கு குழிக்கடியில் புதைத்து விடுங்கள்.

பலியிடுங்கள், உங்களைப் பலியிடுங்கள்
பலியிட முடியாதபோது
பீரங்கிவருகிறது பலிகொள்ள
எல்லாவற்றையும் விட
எல்லாவற்றையுமே விட
துப்பாக்கிகள் , பச்சையுடைகள், சப்பாத்துகள் எல்லாம்
வலிமையாகிவிட்டன
இந்தப்பூமியையும் விட
இந்த வானத்தையும் விட.

இது பீரங்கிகளை அதிகம் நம்பும் காலம்

எனது வார்த்தைகள் வெளியே வீசப்பட்டிருக்கின்றன
உலர்ந்த சருகாய்க் குப்பையாய்.

பீரங்கியின் வடிவில் முட்டாள்தனமா?
முட்டாள்தனத்தின் வடிவில் பீரங்கியா?

விகாரையின் முன்னே போர்க்கலங்களின் படையல்
தேமாப்பூக்களைச் சூடிய பீரங்கிகளை
வழிநீளம் இழுத்துச் செல்கிறார்கள்.

பிக்குகளின் நிழலையும் நசித்துச் செல்கின்றன
பீரங்கிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்கோவின் வயல்

மணியொலியோடு வருவது யார்
முதல் மணிக்கு வந்த மாதவக்குமாரனை
அடுத்த மணியொலி வகுப்பறையிலிருந்து அழைத்துப்
போகிறது.
அவர் பிரிய மனமில்லாமற் பிரிந்து செல்கிறார்
தீர்க்கப்படாத கணக்குகள்
பாதியிலேயே நிற்கின்றன
நாங்களும் பாதியிலேயே நிற்கிறோம் தடுமாறிக் கொண்டு.

இப்போது
இந்த மணியொலி அழைத்துவந்தது
'பிக்காசோ' வையா 'வான்கோ'வையா
'மாற்கு'வையா 'வரதராஜனை'யா

வர்ணங்களும் தூரிகைகளும் அசைந்து
வினோதங்களான வகுப்பறையில்
கணிதவெளி உருமாறிக் கலை வெளியாயிற்று.

இடையில் இன்னொரு மணியொலி அவசரமாய்...
கூடவே, பச்சை வெளிகளில் ஒரு நெருப்புக்கொடி
பாம்பாய் ஊர்கிறது.
மஞ்சள் வயல்களில் புதையுண்டு நிற்கும் படைவண்டி
நிச்சயமாக "வான்கோ"வினுடையதல்ல
அவருடைய காகங்களைச் சுட்டுக் கொன்றது யார்?
இப்போது இந்தப்படை வண்டியை வயலுக்குள்ளே
இறக்கியது யார்?
படை வண்டிக்குள்ளிருந்து குதித்தோடி
எங்களை நோக்கி வரும் துவக்குகள் எதற்காக?
என்னருகில் மணப்பது யாருடைய நிணம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களுக்கடியில் நகர்ந்து செல்கிறது தீ.

என்ன கொடுமை, எல்லா வர்ணங்களும் கரைந்து
அபாய வர்ணமாயிற்று

பதிலறியமுதலே அடுத்த மணியொலி
இப்போது எல்லோரும் பதுங்கு குழியுள்.
அலறிய மணியொலியை
தின்றெழுகிறது குண்டெறி விமானங்களின் அபாயவொலி

இனிவரும் மணியொலிக்காக காத்திருக்கும் பொழுதில்
கண்டேன்
காயங்கள் ஆயிரத்தை.

அதில் என்முகமும் உன்முகமும்
மேலும் கொலைவெளியான வகுப்பறையையும்
வான்கோவின் மஞ்சள் வயல் வெளி
பிக்காஷோவின் குவார்ணிக்கா ஆனதையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்சத்திரம்

விடைபெறுகிறேன் உன்னிடமிருந்து
சிறு கூடாரம் வானமல்ல
வானம் சிறு கூடாரமுமல்ல
எப்போதும் வாதிட்டுக் கொண்டிருக்க முடியாது
பொய்யை விடப் பிடிவாதத்தின் கூர்
அதிக காயங்களைத்தரும்.

விடைபெறுகிறேன்
எந்தத் தோல்வியும் இல்லை எந்த வஞ்சனையுமில்லை.

கழிவிரக்கங்கள் இனியும் வேண்டாம்
இனியும் கத்தியாகவும் கேடயமாகவும் இருக்க முடியாது
ஒரு பயணிக்கு அது அவசியமுமில்லை.

கோபங்களில்லாத காடு
தீப்பற்றியெரியாத வெளி
விசமற்ற நீர்ச்சுனை
பொறிகளில்லாத வழி
எங்கேனுமிருக்குமென்று தெரியவில்லை

குலுக்கும் கரங்களில் பளபளக்கும் நகங்கள்
சினேகத்தின் ஈரத்தையும்
அன்பின் நெருக்கத்தையும் சிதைக்கின்றன

எல்லாவற்றையும் பிரித்துப் பார்ப்பதில்
அழிய வேண்டுமா பொழுது
எல்லாவற்றுக்கும் பொறி வைப்பதில்
கசங்க வேண்டுமா மூளையின் மலர்?

எதையும் நான் எடுத்துச் செல்லவில்லை.
என்னிடமும் எதுவுமில்லை கொண்டு போவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகங்களும் வேண்டாம்
வலி தரும் நினைவுகளால் என்ன லாபம்?

அதோ பறவைகள், பூக்கள், மனிதர்கள்
குழந்தைகளும் விரிந்த நிலமும் புன்னகையும்

வழி தவறிய ஆட்டுடன்
ஓரிடையன் தொடர்ந்தும் அலைய முடியாது.

உனது சொற்களிலிருந்தும்
புள்ளியிலிருந்தும் விடைபெறுகிறேன்.

செயலின் முகம் விரிகிறது
இன்னொரு வெளியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவு நோக்கித் திரும்பும் நட்சத்திரம்

அன்றிரவு, நாங்கள் எதைப்பற்றிப் பேசினோமோ
அதுவே பின்பு நடந்தது
பிறகும் நடந்தது
பின்னரும் பின்னரும்

ஆனால் இப்போதும் அவர்கள்
இதைப்பற்றியெல்லாம் யோசிக்கப்போதில்லை

நாங்கள் இரவிரவாகத் தூங்காதிருந்து
எல்லாவற்றையும் பற்றிப்பேசினோம்
நிலவு மறைந்து
நட்சத்திரங்கள் மறைந்து
நமது கனவுகளைப் பயிரிடுவதற்குள்
பகல் மறைந்து
பொழுதழிந்து வழியழிந்து போகிறது

ஆனாலின்னும்
யாரும் எதைப்பற்றியும்
கவலைப்படுவதாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லக்கு

*ரஜனிகாந் முப்பது பேரை*
*வெழுத்து வாங்குகிறார்*
*சிவாஜி வெற்றிப்படமா தோல்விப்படமா*
*யாருக்குத் தெரியும்*
*பிம்பத்துக்கு வெளியே*
*ரஜனி*
*சந்நியாசியா அரசியல்வாதியா*

*யாருக்குத் தெரியும்*
*அவருக்கே தெரியுமா?*

*அடையாளங்காணப்படாத பிணத்தின் அருகில்*
*பாணுக்கு கியூவில் நிற்கிறேன்*
*இலையான்கள் பிணத்திலும் மொய்க்கின்றன*
*என்னிலும் மொய்க்கின்றன*
*பாணிலும் மொய்க்கின்றன.*

*தேவனே!*
*அந்தோனியார் கோவிலில்*
*பின்னேரங்களில்*
*செபம் சொல்ல வரும்*
*திரேசம்மாக்கிழவி இரண்டு நாளாக வரவில்லையே*
*அவளுடைய பேரனை யார் கடத்திச் சென்றது?*
*அவள் ஏன் தேவனிடம் முறையிடவரவில்லை?*
*கடலில்*
*காணாமற்போன புதல்வனைக் கைவிட்டதைப்போல*
*இப்போதும் தேவன்*
*பேசாதிருந்துவிடக்கூடுமென்று நினைத்தாளா?*

*2007.08.16*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாளில் முன்னூறு ரூபாய் விலையேறியது
ஒரு லீற்றர் பெற்றோல்.
அப்படியென்றால்
இப்போது என்னவிலை என்று கேட்டான் விருந்தாளி
அவனுக்கு விலை சொல்லிக்கொண்டிருக்கும்போதே
ஏறியிருந்தது இன்னும் நூற்றம்பது ரூபாய்

இதை எழுதிமுடிப்பதற்கிடையில்
எண்ணூற்றம்பது ரூபாயாகிவிட்டது அது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை
ஒரு நாளில்
இப்படி ஏறுகிறது

எவருடைய குருதிக்கும்
இந்த விலையில்லை
எவருடைய கண்ணீருக்கும்
இந்த மதிப்பில்லை.

ஒரு அரேபியன் அறிவானா
தன்னுடைய நிலவூற்று
இப்படி எல்லைக் கோடுகளைத்தாண்டி
பகிரங்கமாக விலைபோவதை

அகதிக்கூடாரங்களே நிரந்தரமாகிவிட்ட
பலஸ்தீனத்தில் குண்டுகள் வெடிக்கின்றன
ஈராக்கிலும், பாகிஸ்தானிலும்
பொலிகண்டியிலும் குஞ்சுக்குளத்திலும்
குண்டுகள் வெடிக்கின்றன
சனங்கள் கொல்லப்படுகிறார்கள்.

ஓலம்
குருதி கொப்புளிக்கும்
சாவோலம்

தலைப்புச் செய்திகள்
செய்தி விவரணங்கள்
ஆய்வுகள்
புள்ளி விவரங்கள்
குண்டு வெடிப்புகள் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகள் பற்றி
பி.பி.ஸி, சி.என்.என், அல்ஜஸீரா மற்றும்
எல்லா அலைவரிசையிலும்

நெருப்பு
புகை
குருதி
கொலை

ஆனால் எதையும் பச்சையாகக் காட்டாதே
பச்சையாகக் கொல்
உயிரோடு எரி
மரணத்துக்கு உயிரூட்டு

ஆனால் எதையும் அப்படியே காட்டாதே

பசியால் வாடுகிற குழந்தைகளைப்பற்றி
வீடில்லாமல் தெருநீளம் அலைகின்ற மனிதர்களைப்பற்றி
எதையும் சொல்ல முடியாமல்
தொண்டைக்குழி பெருத்த அறிஞரைப்பற்றி
யாருக்கும் தெரியவில்லை.

அதைப்பற்றியெல்லாம் யாருக்கும் தேவையில்லை

சிவாஜி படத்தை பத்தாவது தடவையாக
இழுபட இழுபடப் பார்த்துவிட்டு
துக்கக்கலக்கத்தோடு
பியரடிக்கப்போகிறார்கள் பள்ளிப்பிள்ளைகள்

துவக்கைத்தூக்கிக் கொண்டு போகிறார்கள்
'சென்றி'க்குப் போராளிகள்

சிவாஜியை
முறைபோட்டு பார்க்கிறார்கள்
படைச்சிப்பாய்கள்

நாங்கள் மட்டும் தலையிலடித்துக் கதறியழுது
நதி பெருகுமா கானல் தீருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மஞ்சள் பூக்கள்

மீண்டும் மஞ்சள் பூக்கள் பூக்கின்றன
இந்தத் தெருவோரங்களில்
ஆவரசு கொன்றை திருநொச்சி என்றாயிரம் பூக்கள்

பூக்களைக் கண்டறிய முடியாக் காலத்தை நீங்கி
மறுபடியும் தெருவுக்கு வந்தேன்
தெருவில்
பெருக்கெடுத்தோடும் நினைவுப் பேராறு

முன்பு
துயர்ப் பொதியோடு வீடு நீங்கி, ஊர்நீங்கி,
அச்சிறு கடலோரம் செல்கையில்
பிள்ளைத் துயர் பெருக்கெடுத்தோடிப் பேராறாகியது.

வழிநெடுகப் பொறியோடும்
பொறிகொண்ட நெஞ்சொடும் அடுக்கடுக்காய்
'நம்நண்பர்' முகம் மாறி நிற்கையில்
பூக்கள் உலர்ந்து வாடின
பொறியிலும் வலையிலும் சிக்கிய தெருவில் மிஞ்சிய
ஒரு பிள்ளையும் பிள்ளை முகத்தோடு வரவில்லை.

பேரரசன் தன் வாளினை
அத்தெருவில் நிறுத்தி வைத்திருந்தான்.

அச்சத்தின் நிழல்
எல்லாவற்றையும் மௌனக் கிடங்கினுள் தள்ளியது
எல்லாத் திசைகளும் அடைபட்டிருந்தன அப்போது.

ஒரு வழிதேடி
ஒரு விதி தேடிச் சனங்கள் அலைய
எதிரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா விதியிலும் எல்லா வழியிலும்
நிறுத்தப்பட்டிருந்தன பேரரசனின் வாள்கள்.

ஆனாலும்
அச்சத்தின் நிழலைக் கடந்து சென்றனர் சிலர்.

அந்த மௌனக் கிடங்கே
பின்னர் மாபெரும் சவக்குழியாகவும்
பெருஞ்சிறையாகவும் மாறிப்
பேரரசனின் பரிவாரங்களைக் கொள்ளையிட்டது.

மீண்டும் மஞ்சள் பூக்கள் பூக்கின்றன
தெருவோரங்களில்
ஆவரசு... கொன்றை... திருநொச்சி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரத்தக் கிடங்கு

பெருங்கிடங்கினுள்ளே காத்திருந்தது
ரத்த நிறத்திலொரு நிழல்

ஆயிரமாயிரம் தலைகளை கொண்டுபோகும்
இந்த நாட்களில்
கறுத்திருக்கும் வெயிலுக்குள்
கொப்பளிக்கிறது இரத்தப் பெருக்கு.

சாவின் புன்னகையைக் கண்டேன்

அழிவின் காலம்
தீர்க்கதரிசிகளைக் கசையலாடித்தபின்
வெளியே துரத்துகிறது.

முள்முடிகளின் அலங்காரம்
இதோ
இதோ

நெருங்கிவரும் அபாயத்தின்
கரு நிழலுள்
விருந்துக்காகச் செல்லும் வீரர்களை விலகினேன்.

பனை மரங்களுக்குக் கீழே செத்துக்கிடந்தன
நாறிய பிணங்கள் நூறுக்கு மேல்
யாருடையவை யாரறிவார்?
தெரிந்த முகங்களை எப்படிவிலக்குவது?

'பொன்னாய் மின்னிய மண்ணில்
பூவாய் உதிர்ந்து போகிறது
துளிராயிருந்த உயிரெல்லாம்'
என்றொருத்தி பாடுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரக்கேறிவரும் அவளுடைய பாட்டில்
தீராத சாபத்தையும் வசையையும்
ஆற்ற முடியாக் கோவத்தையும்
இறக்கினாள் இரத்தப் பெருக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவசுலோகம்

'பிள்ளை பெறாதோரும்
பால் கொடாதோரும்
மகிழ்ந்திருக்கும் காலமிது'
என்று சொல்கிறான் தீர்க்கதரிசி.

தீர்க்கதரிசிக்கு வழிகாட்டியானது
தேவசுலோகம்.

அவன் விரும்பாத விருந்தில்
அவன் விருந்தாளியாக்கப்பட்டான்

அவர்களுடைய ஒப்புதலின்றியே
அவர்கள் விருந்தாளிகளாகவும்
பரோபகாரிகளாகவும் ஆக்கப்பட்டனர்.

கட்டளைகள் கட்டளைகள்
பெருங்கை கொண்ட கட்டளைகள்
வானத்தையும் மூடின.

வழித்தேங்காய்
தெருப்பிள்ளையார்
அடியடா அடி
நடத்தடா நடத்து
இப்போது தெருவும் உனது
தேங்காயும் உனதே
பிள்ளையாரும் உனக்கே
அரோகரா அரோகரா
உனக்கும் அரோகரா
தேங்காய்க்கும் அரோகரா
தெருவுக்கும் அரோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரோகரா அரோகரா

பிள்ளையுடையோரெல்லாம்
பலிபீடத்தில்
பலிபீடமோ குருதிச் சேற்றில்

மயான நினைவுளோடு தெருநிறையச் சனங்கள்
வீடுகளிலும் கரு நிழலாய்
படிந்திருக்கிறது கல்லறை ஞாபகம்

பிள்ளை பெறாதோரும்
பிள்ளையில்லாதோரும் கூடவே
மயானக் கரையில்
மயானத்தின் நடுவில்.

அரோகரா அரோகரா
எனக்கும் உனக்கும் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும்
அரோகரா

"எல்லாக் கட்டளைகளுக்கும் ஒரு மயானமுண்டு
எல்லா நிம்மதியின்மைக்கும்
முடிவுப்புள்ளியுண்டு
அரோகரா அரோகரா" என்று யாரோ ஒருவர்
புலம்பிப்போகிறார்.

இது ஆற்றுமோ
காயப்பட்ட தேசத்தின் ஆன்மாவை
தோற்கடிக்கப்பட்ட வாழ்வின் தீராத்துயரை?

வேரோடுகிறது அகதி வாழ்க்கை
சொந்த நிலத்தில், கண்ணீருக்குள்.

எல்லாவற்றுக்கும் என்னவழி?
எல்லாவற்றுக்கும் என்னவழி?

வழியுடையோரே சொல்லுங்கள்
புலம்பல் ஒரு வழியைத் தருமெனில்
கதறலும் மண்டியிடுதலும்
ஒரு வழியைத்தருமெனில்
மண்டியிடுங்கள்
கதறுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்புங்கள்

கதறவும் புலம்பவும் மண்டியிடவும்
கொடுமை நிகழவேண்டும்
கொடுமை, மாபெரும் கொடுமை...
அதுவா வேண்டும்?

ஒளி கண்ணைக்கூசுமெனில்
இருளிலேயே இரு
இருளே சுகமானது
இருளே அற்புதமானது
அரோகரா அரோகரா
கொண்டாடு கொண்டாடு
எல்லாவற்றையும் அரோகராப்போட்டுக் கொண்டாடு.

உனக்கென்று வந்த
வழியைத் தொலைத்துவிட்டு
அடிமையாகக் கொண்டாடு
அரோகரா அரோகரா

உன்னிடம் என்னவுண்டென்று
உனக்குத் தெரியும் நாளில்
உன்னில் வீரம் முளைக்கும்
உன்னிடம் அறிவு முளைக்கும்
அப்போது
உனது துயரெல்லாம்
சிறுதுரும்பாகிவிடும்
உன்னுடைய புலம்பல்
உன்னை அவமானப்படுத்தும்
அன்றறிவாய்
யார் உன் பகையென்றும்
யார் உன் நட்பென்றும்

கண்களைத்திறக்கும்போது தெரிகிறது
சூரியோதயமும் நிறங்களும்
கண்களைத்திற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுகளைத்திற
அப்போது தெரியும் வழிகாட்டியின்
மகிமையும் வழியின் புதுமையும்

உன்னிடமேயிருக்கிறது
உனது காலமும் உனது ஞானமும்
ஞானத்தின் திறப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறை

காடுகளின் மேலாக வந்த சூரியன்
ஒரு நாள் வெளியில் வர வேண்டியதாயிற்று
அது வயல் வெளி
வயலில் பயிர்கள் விளைந்தன.
பயிர்களின் மேல் வந்த சூரியன்
நிழலற்றுத் திரிந்தது.

எங்கும் வெயில் எங்கும் ஒளி
ஒளியைத் தலையிற் சூடிய சனங்கள்
சூரிய நமஸ்காரம் செய்தனர்.
ஆடி மகிழ்ந்தனர், கொண்டாடிக் களித்தனர்.

வெளியின் மேலாக, வயலின் மேலாக,
பயிர்களின் மேலாக வந்த சூரியன்
ஒருநாள் பிணங்களின் மேலாக வந்தது

வெளிநிறைந்த பிணங்கள், வயல் நிறைந்த பிணங்கள்
வயலில் விளைந்த பிணங்கள்
அன்று வந்த சூரியன் காடுகளின் மேலாக வந்ததைக்
கண்டேன்
அது பிணக்காடு

அந்தக் காட்டில் எங்கும் இருள் எங்கும் கறை
அப்போது சனங்களின் அகத்திலும் இருளே நிறைந்தது
இருளில் ஒருவரை ஒருவர் கொன்று புசித்தனர்
பிறகு சூரியனையும் கொன்று தின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையடி வினை

பாடலெல்லாம் சிதைந்திருந்த தெருவழியே
தனித்திருந்த பனை மரங்களைக் கேட்டேன்
இந்த வெறி எங்கே கொண்டு போகும் என்று.

எந்தப்பனையும் எதுவும் பேசவில்லை
நூற்றாண்டுகள் பலவும் வாய் மூடி மௌனமாக இருந்த
பழக்கத்தை விடுவதில்
ஏராளம் தயக்கங்கள்
ஒவ்வொரு தளும்பாய் பனை நீளம் படர்ந்திருந்தன.

*2*

நானறிய
நூற்றாண்டுகளை விழுங்கி விழுங்கி
எல்லா வெறிக்கும் வழிவிட்ட பனையே!
முறிகின்றாய் பெரும் பழி சூழ் வினையில்.

ஒவ்வொரு பனையாய் முறிகின்றாய்
முறிந்த பனைகள் துளிர்ப்பதுண்டோ?

தோப்பெல்லாம் பெருந்தீ மூண்டெரிந்தாலும்
புதுக் குருத்தெறியும் வரமுடைய தாலமே!
கால நிழலின் குழியுள்
இதோ உனது நாட்கள் செத்தழிகின்றன.

எல்லா வெறிக்கும் வழி விட்ட
முந்தைப் பெரும் பழியெலாம்
இன்று
உன் ஒவ்வொரு தலையாய் கொண்டு போகிறது என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் மௌனம்தானா சொல் பனையே ?
தோப்பென்றும் கூடலென்றும் பேரோடிருந்த
பனைங்காடே!

பாடலாயிரம் பெருகி இசை பொழிந்த தெருவழியே
நிழல் விரித்திருந்த பனந்தோப்பே!
வானளாவி
நிலவும் பரிதியும் மறைந்தொளிந்து விளையாட
ஒளிச்சித்திரங்களால்
பூமியின் சுழற்சியைச் சொன்ன புதிரே!
இன்று அகாலத்தில்
பாடல் சிதைந்த தெருவழியே தனித்திருக்கிறாய்
ஒவ்வொரு பனையாய் முறிகின்றாய்

முறிந்த பனைகள் துளிர்ப்பதுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாய்
# இரண்டு நாய்

ஆமணக்கம் புதர்களில்
மறைந்து நின்று குரைக்கும் நாய்
தன் நிழலை அறியவில்லை
அதுவும் நாயின் வடிவில்தான் என்று.

இரண்டு நாய்கள் குரைத்த போதும்
ஒரு நாயின் ஒலியே கேட்டது
பிறகு
நிழல் வந்த போதும் இருள் வந்த போதும்
ஓடியொழித்தது அந்த இன்னொரு நாய்

என்ன ஆச்சரியம்
எப்போதும் ஒளி அழைத்து வருகிறது
அந்த இன்னொரு நாயை.

இரண்டு நாய்களும் ஒரு போதும்
கடிபட்டதில்லை என்பதுவும் இன்னொரு ஆச்சரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி 2008

*சூரியனின் திசை கிழக்கன்றி வேறென்ன?*

ஆனால் எங்கள் தலைக்கு மேலே
சூரியன் மேற்கிலும் சில போது உதித்தது
காலம் இடம் மாறுவதில்லையா
அது போலத்தான்
வாழ்வும் இடம் மாறித்தொலைத்தது

நாங்கள் தலையினால் நடந்தோம்
தலையை மண்ணுக்குள் கூடப் புதைத்தோம்

தலையில்லாமல் வாழ்வதும் ஒரு வாழ்க்கைதான்
அந்த வாழ்க்கையின் ருசியைப் பற்றி நான் சொல்லப்
போவதில்லை
அதைத் தெருநாய்கள் சொல்லட்டும்

நாங்கள் கண்ணீரைக் காய்ச்சிக் குடித்தவாறு
ஒரு காலத்தை வளர்த்தோம்
பிறகு கண்ணீரே பெருஞ்சுவையானது பலருக்கும்.
கசப்பெனினும் மது ருசிக்கும் அல்லவா
அது போலத்தான்
கண்ணீரும் ருசிக்கத் தொடங்கியது.

போதை உச்சிக்கேறிய பிறகு
எல்லாமே ருசிதான் எல்லாமே கொண்டாட்டம்தான்
பிறகு
கண்ணீர்ப்பானத்தைத் தவிர
வேறெதுவும் ருசிக்கவில்லை

ஆமாம் கண்ணீரைத் தவிர
வேறெதுவும் ருசிக்கவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த பின்னும் இருத்தல்

அவர்கள் எங்கோ சென்றனர்
என்னவாகவோ ஆயினர்

சென்றபின்னும்
செல்லமுடியா நிழல் உறைந்துளது
இம் மண்ணடுக்கில் அடுக்கடுக்காக
இரத்தச் சூட்டுடன் ஆழத்தே.

ஒரு பெரும் மயான வெளி

எரிந்தழிந்த உடல்கள்
துப்பாக்கிகளால் எரிக்கப்பட்ட துப்பாக்கிகள்
எல்லாம் அவ்வெளியின் கோரமாகி
சாட்சியாகி, அவ்வெளியின் நினைவாகின

ஓலங்களின் படிகை
காயாத குருதியின் மணம்
அவ்வெளியின் அடியில் ஆழ் மையம் வரையில்
நீரூற்று வரையில் சென்றிறங்கி
ஆயிற்றொரு வரலாறு.

வரலாறென்பது அகாலமாயிற்று
வாழ்வென்பது ஓலமாயிற்று.

செல்ல முடியாப் பயணத்துக்காக
அவர்கள் எல்லாச் சவாரிகளையும் நடத்தினர்
எல்லாச் சவாரிகளுக்காகவும் சவுக்குகளைச் சொடுக்கினர்
அத்தனை சவுக்குகளின் சொடுக்கும்
அழியவில்லைக் காற்றில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாத பயணங்கள் காலடியில்
விசைகுன்றாச் சவுக்குகளின் சொடுக்குதல்கள்
ஒவ்வொரு சொடுக்குக்கும்
ஓராயிரம் ஓலக்குரல்

பலி கொள்ளப்பட்ட இதயத்துக்கு அளிக்கப்பட்ட பரிசு
அவமானமும் கண்ணீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் என்ன சொல்ல முடியும் உங்களிடம்?

நான் என்ன சொல்ல முடியும் உங்களிடம்?

ஒரு காகித மலர்
மணம் வீசமுடியாமற் திணறும் நீண்டகாலத்தை
ஒவ்வொருவரும் ரகசியமாகவே வைத்திருப்பதால்
நமக்கிடையில் சேர்ந்து கொண்ட துக்கங்களையும்
மிஞ்சிய கழிவிரக்கத்தையும்
என்ன செய்வதென்று தெரியாமற் திணறுவதைப் பற்றி
நான் என்ன சொல்ல முடியும் உங்களிடம்?

ஒவ்வொரு நாட்களுக்கடியிலும் உறைய வைக்கப்பட்ட
அந்தந்த நாட்களின் உயிர்ப்புகளைப்
பிரதியீடு செய்தவற்கு வழியற்ற
நம் கையாலாகாத் தனங்களுக்கும் முறையீடுகளுக்குமாக
ஒரு சமாதியை எப்போது வைப்பது?

கலங்கியிருக்கிறது இந்த நீர் நிலை

ஆகவே,
வாழக்கிடைத்த நாட்களைச் சிலுவையிறைதல்
மாபெருங்குற்றம் என்பதை உணர்ந்த வேளையில்
நின்றேன் தண்டனையின் முள்முனையில்.

நம் வாழ்க்கை நம்மால் துரோகமிழைக்கப்பட்டது
அவ்வாறே,

காலத்தின் படிக்கட்டுகளில்
கசிந்து கொண்டிருக்கும் குருதியெங்கும்
துரோகத்தின் மணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் வரக்கூடும் என்னுடன்
இத்துரோகத்தைக் கொன்று புதைக்க?

ஒரு கயிற்றின் நினைவுகள்
ஊஞ்சலைப் பற்றியதா
சுருக்கிடப்பட்ட கழுத்தைப் பற்றியதா என்பதை
அறியக் காத்திருக்கும் வரலாற்றுக்குறிப்புகளில்
பரிசுகளுக்கும் விருதுகளுக்குமாக
ஒதுக்கப்பட்ட நேரங்களைக் கழிக்கக் கோருகிறேன்.

மிஞ்சியவற்றைக் கணக்கிடுவதற்கிடையில்
ஒரு திரை விழுகிறது எதிர்பாராமல்

மீண்டும் அலங்கரிக்கப்பட்ட அரங்கத்தில்
இன்னொரு நாடகத்துக்கான அழைப்பு

முடியாது, இனியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலிலிருந்து வடியும் குருதி

நெருப்பைத் தின்னுவது
அப்படியொன்றும் கடினமானதல்ல
முள்ளின் மேற் தூங்குவது சிரமமானதுமல்ல

குழியில் வீழ்த்தப்படுவது
இருளிற் தள்ளப்படுவது
வரிசையிலிருந்து நீக்கிவிடுவது
எல்லாமே மிகச் சாதாரண விசயங்கள்.

பாம்புகள், நரிகள், ஓநாய்கள்,
முதலைகள், விலாங்குகள், கழுகுகளோடு
வாழ்வது அதிசயமானதுமல்ல.

கண்ணீருடனும் பசியுடனும் இருப்பது
துக்கத்துக்குரியதோ அவமானத்துக்குரியதோ அல்ல
அது மகத்தானதுமல்ல.

அன்போடிருத்தல்
கருணை மிகக் கொண்ட காதல்
ஒளிரும் உண்மையோடு வசமாகுதல்
அறத்தின் முன்னே தன்னை நிறுத்துதல்
என்ற ஆயிரங்காலத்துப் பயிர்களை
ஓரிரவில்
அல்லது பட்டப்பகலில் மேய்வதொன்றும் புதிதுமல்ல

மனிதர்கள் யார்?
அவர்கள் எவ்வாறிருப்பர்? என்றறிய முடியாதிருப்பதும்
எப்போதெல்லாம் ஏதோவொன்றாகி
அல்லது வேறு வேறாகி
வர்ணங்கள் பலவாகி தன்னைச் சூழ்ந்தொரு விம்பப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பதும்
பிறகொரு கால்,
தன்னை மறைத்து பிறரைக் கொன்று தின்பதுவும்
இன்னொரு வேளை
பிறரை மறைத்துத் தன்னைச் சிகரமாக்குவதும்
எப்படியெல்லாம் நிகழ்கின்றன
என்ற குழப்பங்களை விடவும்.

மனிதர்களே உருவாக்கிய விதிகளையும் முறைகளையும்
மனிதர்களே மீறுவதும்
மனிதர்களே ஆக்கிய ஒழுங்கை
மனிதர்களே மீறிச் செல்வதையும்

அறியவே முடியாமல் தவிப்பதை விடவும்.

நெருப்பைத் தின்னுவது
அப்படியொன்றும் கடினமானதல்ல
முள்ளின் மேற் தூங்குவது சிரமமானதுமல்ல

குழியில் வீழ்த்தப்படுவது
இருளிற் தள்ளப்படுவது
வரிசையிலிருந்து நீக்கிவிடுவது
எல்லாமே மிகச் சாதாரண விசயங்கள்.

பாம்புகள், நரிகள், ஓநாய்கள்,
முதலைகள், விலாங்குகள், கழுகுகளோடு
வாழ்வதெல்லாம் அதிசயமானதுமல்ல.

மேலும்

ஒரு கொலையை நிகழ்த்துவதும்
ஒரு கொலையை மன்னிப்பதும் பெரிதுமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதைசேறு

நாடு கடக்க முடியவில்லை
சுற்றி வரக்கடல்
சிறைப்பிடிக்கப்பட்ட தீவில்
அலைகளின் நடுவே
துறை முகத்தில் நீண்டிருக்கும் பீரங்கிக்கு
படகுகள் இலக்கு.

மிஞ்சிய பாதைகளில்
காவலர் வேடத்தில் கொலையாளிகள்
குற்றமும் தண்டனையும் விதிக்கப்பட்ட கைதியானேன்.

எந்த வரைபடங்களில் சிக்கியது
எல்லோருடைய வழியும்?

ஒரு கொடியின் கீழும் நானில்லை
ஒரு கொடியும் எனதில்லை.

எனது மொழி என்னைக் கொல்கிறது
மொழியொரு தூக்கு மரம் என்றறிந்தபோது
எனது தண்டனையும் ஆரம்பமாயிற்று
எனது குரல் என்னை அந்தர வெளியில் நிறுத்துகிறது
விரோதியாக்கி.

அலையடிக்கும் கடலின் மேல்
நீண்டிருக்கும் பீரங்கிக்கு இதோ இரை.

அல்லது
பெயர்க்க முடியா நிழலின் அடியில்
புதை சேற்றில்
பிணைக்கப்பட்ட அகதி முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழிகளைச் சேர்த்தவர்கள்

தப்பிச் செல்ல முடியா வரலாறு
காயங்களுடன் படுத்திருக்கிறது காலடியில்

எல்லாப் பழிகளும் சேர்ந்து ஓராயுதமாகியது
எல்லாவற்றையும் தின்னும் பேரவாவுடன்.

பழிகளைச் சேர்த்தவர்களின்காலம்
பழிக்கப்பட்ட பின்னும்
உள்ளே அழுகிய மரத்தில்
ஆடுகின்றன கூடுகள் என்கிறார் சிலர்
தொலைவில்.

இனியுமொரு புயலைத் தாங்கும் வலிமையைத் தா
என்று எந்தத் தேவதையை யார் யாசிப்பது?

இன்னும் மீதமிருக்கிறதா என்ன
பச்சை உடலின் மீது
இரத்தத் தினவோடு வாளைப் பாய்ச்சும் பேராசை?

ஆயின், வந்தருள்க
காயங்களுடன் படுத்திருக்கும் வரலாற்றைத் துயிலெழுப்பி
வழிநடத்த.

இந்த இரவு நான் சற்றுக் கண்ணாற வேண்டும்
ஒரு குளிர்காலத்தை நினைக்கின்றாள் தீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாயவெளி

பொய்யின் எல்லா அழகும்
ஒரு நொடியில் மறைந்தபோது
முதல்முறையாக அவர்கள் கண்டார்கள்
யதார்த்தத்தின் அபாய வெளியையும்
ஒரு நாளின் இதயத்தையும்.

இருளும் மாய வர்ணங்களும் படர்ந்திருந்த
ஒரு நிலப்பரப்பில்
முதற்குமிழி உடைந்த கணத்தில்
பேச்சோசையெழுந்தது
பாட்டோசை கேட்டது
பாங்கொலியோடு சூரியோதயம் நிகழ்ந்தது.

உடைந்த மாளிகையின் அடியில்
இருளடர்ந்த பதுங்குகுழியின் உள்ளே
முதற்தடவையாக ஒளி சுவறியதைக் கண்டேன்

ஊற்றுவாய்கள் அடைபட்டிருந்த ஆழ்பதிவில்
சிலுவை முளைத்திருந்தது.
சிலுவைக்கருகில்
கைவிடப்பட்டிருந்த வாளில்
ஒட்டியிருந்த நெருப்புத்துளிகளில்
பறிக்கப்பட்ட உயிர்களின்
கடைசி வாக்கு மூலங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன

கல்லாக்கப்பட்ட முகங்களை
முத்தமிடத்துடிக்கும் தாயொருத்தியின் நிழல்
கண்ணீரில் மிதக்கக்கண்டேன்
அப்போது கல்லாக்கப்பட்ட முகங்களிலிருந்து
பீறிட்டெழுந்தது ரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதிலமாகியிருந்த நாட்களில்
விதிக்கப்பட்டிருந்த
கோடுகளை அஞ்சிய குழந்தைகளை
வாரியணைத்துக் கொண்டு போகும்
வயோதிபனிடம் இருக்குமா இன்னும்
வாசலற்றிருந்த சமாதியின் தடயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனங்களிடம் வந்தது

அன்றிரவு குருதியொழுகிய பகல் வந்தது
உடைந்து நொறுங்கிய இரவும் வந்தது
கனவுகளைக் கொன்று வெளியே வீசிய பின்
நெருப்பைத் தன்னிதயத்தில் ஏந்திய பெண்ணும் வந்தாள்
புதைகுழிகள் வந்தன
கண்ணீர் நிரம்பிய ஆயிரமாயிரம் பாத்திரங்களோடு
குழந்தைகள் வந்தன.
தங்கள் விதியிலும் வழியிலும் முள்ளடர்ந்ததென்று
சொன்னவாறு சனங்களும் வந்தனர்
உயிரின் ருசி இனிப்போதும் எனச் சலித்தவாறு
வலிமை ஒடுங்கிய தோள்களோடு
தோழர்களும் தளபதிகளும் வந்தனர்.
எல்லாவற்றையும் சிதைத்த பின்
அள்ளிச் செல்லக் காத்திருந்த புயல் வந்தது.
வேர்களெங்கும் நெருப்பூறிய மரங்கள் ஒவ்வொன்றாகச் சாய
இடிந்து விழும் வானத்தோடு
கரைந்தொழுகிய மலர்களும் உதிர்ந்த பறவைகளின் சிறகுகளும்
வந்தன

அக்கணத்திற்தான்
நெருப்புத் துண்டாகக் கனன்று கொண்டிருந்த இதயத்தில்
ஒரு விதை முளைக்குமென்று
நினைத்தது வீண் என்ற எண்ணமும் வந்தது

சனங்களிடம்
மேலும் மேலும் சனங்களிடம்
சனங்களாகிக் கொண்டிருந்த எல்லோரிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலே காற்றே கொதிநிலமே....!

ஒடுங்கிச் சிறுத்த அந்தக் கடற்கரையில்
மலமும் மனிதர்களும் ஒன்றாகவே மிதந்து கொண்டிருந்த
நாட்களில்
பகல் வந்தது இரவும் வந்தது
யாரும் எதையும் கவனிக்கவில்லை
அங்கே நினைவுகளையும் கனவுகளையும் இழந்த மனிதர்கள்
ஊர்ந்து கொண்டிருந்தார்கள் பூச்சிகளாகி.

யாரிடமும் ஒரு சொல்லும் மிஞ்சியிருக்கவில்லை.
பகைக்கும் பழிக்குமிடையில்
அந்த நிலத்தோடு சேர்ந்து கிழிபட்டது நம்பிக்கையும்
விசுவாசமும்.
உயிருக்கும் விடுதலைத் தாகத்துக்குமிடையில்
அறுந்து தொங்கிக் கொண்டிருந்த இறுதி நாட்களில்
நெருப்பின் தாழ்வாரத்தில்
உதிரம் வற்றிக் காய்ந்ததைப் பார்த்திருந்தேன்
மனித ரத்தம் பெறுமதியற்றது கண்டேன்
இரவும் பகலும் எதுவுமற்றதாய்ப் போனதையும் கண்டேன்.

காமம் வற்றியுலர்ந்தது
பதுங்கு குழிகள், புதைகுழிகள் எல்லாம் ஒன்றாயின
தேவாலயத்தில் மதகுருக்கள் கைகளை உயர்த்தியவாறு
பதுங்குகுழிகளுக்குள் சரணடைந்தனர்.
மணல், பெருங்குவியலாகக் குவிந்த மணல்
கடலுக்கு கரைகட்டியிருந்த மணல் மேட்டில் பல்லாயிரம்
புதைகுழிகள்,
பல்லாயிரம் பிணக்குவியல் ....
அலை பிணங்களைத் தொட்டுப் போயிற்று.
மனித நிழலைத் தேடித் தீயின் நடனம்
எங்கும் தீயைத் தாண்டிட முடியாப் பேரவலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பிணமாகிக் கொண்டிருந்தேன்

கடல் நெருப்பாகியது
கொதிநிலத்தில் பிணங்களும் வெந்தன
கூக்குரல்களால் நிரம்பிய உலகத்தின் ஒரு சொல்லும்
எங்களைப் பற்றியதாக இருக்கவில்லை
மனிதர்கள் ஆகிய நாங்கள்
எங்களைப் பார்க்க விரும்பாதிருந்த இந்த உலகத்திடம்
வந்தோம்
நெருப்பாகிய நிலத்திலிருந்து.

இன்னும் சூடாறவில்லை இந்தப் பிணத்திலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதுவரை?

இனி எல்லாம் ஒழுங்காயிற்று
என்றபோது
அவனருகில் விழுந்தது பிணம்
உருண்டது தலை
தெறித்தது குருதி.

அச்சத்தில் உறைந்தன மறுபடியும்
நம் இதயமும்
நீ பரிசளித்த நாட்களும்
நீ கொண்டாடிய கொடிகளும்

போடா நாயே
வாழ்வெமக்கு அபாயங்களின் மீதான வெடிகுண்டென்று
எழுப்பட்டது மீண்டும்

நான் இப்போதும் காண்கிறேன்
அசையும் துப்பாக்கிகளின் நிழலை

சதாமும் இல்லை பிரபாகரனும் இல்லை
என்றபோதும்
இருக்கின்றன துப்பாக்கிகள்
அவரவர் நிழலைத் தொடர்ந்தபடியாக
யார் யாரிடமெல்லாமோ

இன்று மீண்டும் அகதி முகாமில்
அலைக்கழிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட
அந்தக் காலை நேரத்தில்
கொண்டு வந்து இறக்கப்பட்டோம்
இலக்கங்களாக.

எதுவும் தெரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வரும் கணங்கள் எப்படியென.

நீண்ட வரிசை
வழங்கப்பட்ட இலக்கங்கள்
அவரவரக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில்
அவரவர்.
அவரவர்க்கருகில்
நகராப் பொழுதுகளோடு பிணைக்கப்பட்ட படுக்கை
படுக்கையைச் சுற்றி முள்வலைகள்.

முப்பத்தி ஆறாவது தடவையும்
இன்னொரு ஒப்பனை
புதிய இடத்தில் பழைய அகதி
அகதிகளின் நிழலைக் கண்காணிக்கும்
முள்ளரண்கள்

பழைய அகதிக்கு
புதிய இலக்கங்கள்
பழைய இலக்கங்களுக்கும் புதிய இலக்கங்களுக்குமிடையில்
முடிவுறாத குழப்பங்களுடன்
தூங்கும் கண்களில்
துடித்துக் கொண்டிருக்கும் ஒளியின் மினுக்கம்
ஒரு சிறு மணல் துகள்.

அவமானங்களுக்கென்றே உருவாக்கப்பட்ட
இந்த முகங்களில்
தோற்கடிக்கப்பட்ட பின்னர்
சூடப்பட்டது பரிகாசமா
அரவணைக்க வேண்டுமென்ற அனுதாபமா?
எதுவென்றறிய முடியவில்லை.

ஆனால் ஒன்று
எதிரியிடம் கையளிக்கப்படும் எல்லா மக்களுக்கும்
இப்படித்தான் பரிசுகளின் வெகுமதி காலந்தோறும்
பரிகாசத்துக்கும் இரக்கத்துக்குமிடையில் உருவாக்கப்பட்டு
கைதிக்கும் அகதிக்குமிடையிலான முகத்தில் சூடப்படுகிறது.

மலத்துக்கு மேல் மலமிருக்கும்
அலைக்கழிக்கப்பட்டவர்களின் இரவொவ்வொன்றைப்
பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதற்கு யுத்தத்தின் பிதாவைத் தேடுகிறேன்
எல்லாப் பிணக் குவியல்களிலும்
எல்லாக் கைதிகளின் பிரிவிலும்
எல்லா அகதித் தடுப்பு முகாம்களிலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது முழுப்பெயர்
## அகதி இலக்கம் AM 47815 07

நாங்கள் இன்னும் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.
ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாம்
ஒரு கூடாரத்திலிருந்து இன்னொரு கூடாரம்
ஒரு பாதுகாப்பு வளையத்திலிருந்து
இன்னொரு பாதுகாப்பு வளையம்
என்று மாற்றிக்கொண்டேயிருக்கிறார்கள்.
நாங்கள் களைத்து விட்டோம்
ஆனாலும் அவர்கள் விடுவதாயில்லை.
அகதிகளின் வயதோ கூடிக் கொண்டேயிருக்கிறது.
இளைய அகதிகள் முதுமை அடைந்து கொண்டிருக்கிறார்கள்
குழி விழுந்த கண்களில்
பாழடைந்த காலமும் அவர்களின் கழிந்த வாழ்வும்
துயரொழுகக் கசிந்து கொண்டிருக்கிறது.

களைப்படைந்த அகதிகள்
தண்ணீருக்காக அலைகிறார்கள்
சாப்பாட்டுக்காக அலைகிறார்கள்
இலையான்களுக்கிடையில்
நாறி மணக்கும் மலங்களுக்கிடையில்
குழந்தைகளின் அழுகுரல்களுக்கிடையில்
நிழலற்ற வெளியில்
கொழுத்தும் வெயிலில்
நிராதரவான நிலையில்
ஒவ்வொரு அகதியும் முதுமையடைந்து கொண்டிருக்கிறோம்.
அடிமையாக இருப்பதையும் விடக் கொடுமையானது
அகதியாக இருத்தலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள்
எங்களை நடனமைக்கிறான் அரசியல் புதைப்புக்?
புதிர் பருத்துகள்
புதிய புதிய பதிவட்டைகள்
அடையாளங்களை உறுதிப்படுத்த புகைப்படங்கள் எடுத்தல்
குறியிட்டு இலக்கங்கள் வழங்கல்
மொழிபெயர்ப்புச் சட்டங்கள்
இன்னமும் இந்தப் பள்ளியில்
எம் சுற்றத்துக்கிடையில்
நூற்றாண்டையும் சந்ததிகளுக்கிடையில்
எதிரிகளாகத் தூக்கம்
மலையில் அல்லது பாலையில் அல்லது
இன்னொரு நாளில் இன்னொரு இடத்தில்
அகதியாக்குவதற்காக வரும் இராணுவ அணிகள்
[illegible]
அனைத்துச் சில அரச அதிகாரிகள்.

மீண்டும் அகதி அட்டைகள் குறியீட்டு இலக்கங்கள்
புகைப்படமெடுத்தல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு

ஒரேயொரு தடவை மட்டுமே அகதிகள்
மதிக்கப்படுகிறார்கள்,
தேர்தல் வரும்போது,
தேடி வருகிறார்கள் 'விருந்தாளிகள்' எங்களிடம்
கையும் காலும் இல்லாத எங்களிடம்.

பக்கத்துக் கூடாரத்திலிருக்கும் இரண்டு கைகளுமில்லாத
பெண்ணிடம்
வந்த 'விருந்தாளி' கேட்டார்
'எப்படியம்மா நீ வாக்களிக்கப் போகிறாய்?
ஆருக்குப் போடப்போகிறாய்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓயாக் கடல்... உறங்கா நிலம்... தீராக்கனவு...

சுற்றி வளைக்கப்பட்ட வாழ்க்கை

என்னுள்ளே ஓயாக் கடல்
முன்னே உறங்கா நிலம்
என்றுந் தணியாக் கோபம்
எதனிடமும் தீராக் கனவு...
என் கண்களில் நெருப்பு மூழ்கிறது
ஆறு பெருகியோடுகிறது
சுமைதாங்கிகளாகி விட்ட சனங்கள்...

கிழித்தெறியப்பட்ட மனிதர்களை நிரப்பிய தெருவில்
இன்று தேவன் பிறப்பு
நள்ளிரவு மணியொலி
அடங்கா நெருப்பில் வெந்து தணிகிறது....

கட்டாக்காலி மாடுகளும்
காடு மண்டிய வளவுகளும்
இருளப்பிய தெருக்களும்
கொண்டவூர்களில் சனங்களை விடப் படையினர் அதிகம்
நீ ஊருக்கு வரவேண்டுமாயின்
படையாளிடம் முகவரியைக் கேள்
அவனிடமே அனுமதியை எடு
என்னைப்பற்றி விவரங்களை அவனிடமே அறி

தினமும் என்னைப்பற்றியே அறிந்து கொண்டிருக்கும்
படையினன்
ஒருபோதும் என் கண்ணீரைப் பற்றி
உள்ளே நான் மூண்டெரிவதைப்பற்றி
நான் காடாக வளர்வதைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடல் காயங்களின் பெரும் பிரதேசமானதைப்பற்றி
தூக்கமின்றித் தவிக்கும் என் நாட்களைப் பற்றி
அறிந்திருப்பதில்லை என்றபோதும்
நான் மலமிருக்கும் இடம் பற்றியும் விதம் பற்றியும்
நான் கொட்டாவி விடுவதைப்பற்றியும் அறிந்திருக்கின்றான்.

மேலும்
என் கால்களைப் பற்றிய அச்சத்தையிட்ட கலக்கத்தையும்
என் கைகளையும் தலையையும் கண்காணிப்பதையும்
நீ அந்தப் படையினனின் கண்களில் காணக் கூடுமாயினும்
நீயும் மௌனமாக ஒரு கண்காணிப்பு வலயத்தினுள்
போட்டெடுக்கப்பட்டபின் என்னிடம் அனுப்பப்படுவாய்

போரற்றதொரு காலத்திலும் சுற்றி வளைக்கப்பட்ட
விசாரணைகளால்
கட்டுப்பட்டிருக்கிறதென் வாழ்க்கையும் நாட்களும்

என்னுள்ளே ஓயாக் கடல்
உறங்கா நிலம் தணியாக் கோபம்
எதனிடமும் தீராக் கனவு...

என் கண்களில் நெருப்பு மூழ்கிறது
இரத்தமாய் வெள்ளம் பெருகியோடுகிறது
சுமைதாங்கிகளாகி விட்ட சனங்கள்...

பாலன் பிறப்பை அறிவிக்கும் தூரத்து மணியொலி பட்டுத்
தெறிக்கிறது
இருளுறைந்த சிலுவைகளில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிவாரத்திலிருந்து மீண்டும்

நான் இங்கிருக்கிறேன்
இந்த வயற்கரையில்
தனித்துத் துயரங்களால் சூழப்பட்டு
போர் வெறியினால் பலியாடப்பட்டு

முளுட்டுப் பூவரச மரங்கள் இன்னும் பூக்கவில்லை.
தூர்ந்து போன வாய்க்கால்களில் சிக்கிக்கிடக்கின்றன
இன்றைய நாட்களும் நாளைய நாட்களும்

ஒரு பாடலும் இங்கில்லை
சுரமில்லா நிலத்தில் பாடல் மற்றி
குரலும் அடங்கிப் போகும்
விதியுண்டென்று யார் எழுதினார்?

ஆனால், அதுதான் நடந்தது!

புதர் மண்டியது எல்லாவற்றிலும்

டாங்கிகளோடிய நிலமெங்கும்
இன்று புதர்க்காடு
போர் வெறியின் மீது முளைத்ததிந்தப் புதர்க்காடு

கானாங் கோழிகள் நிலம பதுங்கிகள்
காட்டெருமை எல்லாம் புதராயிற்று
நிலம் நோக்கித் தவமிருக்கும்
வெண்கொக்குக் கூட்டமும் நெல்மணமும்
தந்தையரின் காலடியும்
பெருக்கித் ததும்பிய நீரலைகளும் புதராயிற்று

இனி
மீண்டும் பயிராக்கும் விதி விளைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாய்க்காலில் நீரலைகளைத் தேடும்
சிறகுதிர்ந்த ஒற்றைப் பறவை
இதோ இந்த முலுட்டுப் பூவரசு மரத்தினடியில்
போர் அலைத்த வழியெங்கும் நடந்து களைப்புற்றுள்ளது

மறுபடியும் அடிவாரத்திலிருந்து தொடங்கக்
காத்துளது ஒரு மலையேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரண்

நான் ஒன்றைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்
அவர்கள் வேறொன்றைப் பற்றிப் பேசுகிறார்கள்
நாங்கள் ஒன்றைக் கேட்கிறோம்
அவர்கள் வேறொன்றைத் தருவதாகச் சொல்கிறார்கள்
எனக்குத் தெரியவில்லை
நாங்கள் எப்போது, எப்படி ஒன்றைப்பற்றிப் பேசமுடியும்
என்று...

பிரச்சினைகளின் ஆழ்கிடங்கில் எனது சரீரம்
புதையுண்டுள்ளது
அவர்கள் பிரச்சினைக்கு வெளியே
வழிபாட்டுக்கான அலங்காரங்களைச் செய்து
கொண்டிருக்கின்றனர்
மேலும்
மாபெரும் விருந்துபசாரமொன்றுக்கான ஏற்பாடுகளும்
என்பேரால்...

நான் மலர்களைக் குறித்தும் வானவில்லைக் குறித்தும்
என்னுடைய கனவுகளை வரையவில்லை
மலக்குழிகளிலிருந்து நீங்குவதற்கும்
என் தாயின் வயலொன்றிலோ கடற்கரையிலோ
தொழிலொன்றைச் செய்வதற்குமே ஆவலுறுகிறேன்

ஆகவே, இந்தச் சரீரம் என்னுடையதாகட்டும்
இந்த வெளியில் நான் ஒரு விதையாக விரும்புகிறேன்
என்னால் முடியும்
நான் தானியங்களாகுவேன்
நான் மலர்களாகவும் நிறங்களாகவும் வாசனையாகவும்
நிழலாகவும் துளிர்களாகவும் மாறுவேன்
நான் ஒன்றுக்குப் பதில் பலவாக விரும்புகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம் காடாகவும் பயிராகவும்

ஆகவே, பிரச்சினைகளின் ஆழ்கிடங்கிலிருந்து மீண்டெழ
என்னை அனுமதியுங்கள்

நானொரு உயிரி
எனது எத்தனங்களை என்னாலியற்ற முடியும்.
அதற்கு அனுமதியுங்கள்
இல்லையேல் விலகுங்கள்

இந்தச் சரீரமும்,
இந்தக் குரலும் எனக்குரியதென நானின்னும் நம்பவில்லை
எப்போதும் இன்னொருவராற் புசிக்கப்படுகிறேன்
இன்னொருவராற் சிதைக்கப்படுகிறேன்
எனது ஆன்மாவும் என்னுடைய குரலும் பொதுவெளியின்
பரப்பாகட்டும்

என்பேரால் வழிபாட்டுச் சடங்குகளை நடத்துவோரிடம்
ஒன்றைக் கேட்கிறேன்
இந்தச் சரீரம் என்னுடையதாகட்டும்
இந்த வெளியில் நான் ஒரு விதையாக விரும்புகிறேன்
என்னால் முடியும்
நான் தானியங்களாகுவேன்
நான் மலர்களாகவும் நிறங்களாகவும் வாசனையாகவும்
நிழலாகவும் துளிர்களாகவும் மாறுவேன்
ஒன்றுக்குப் பதில் பலவாக விரும்புகிறேன்
ஆமாம்
காடாகவும் பயிராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளராத மரம் மற்றும் பிறவைக் குறித்து...

"புண்ணைத் தோண்டுவதைக் குறித்து என்ன
சொல்கிறீர்?"என்ற ஆசிரியர் கேட்டார்
கூடவே மருந்து போடுதைப் பற்றியும்.

மேலும் அவர் கேட்டார்,
"வளராத மரத்துக்கு நீரூற்றுவதைப் பற்றி விளக்குக.

அமைதியை நோக்கிச் செல்லும் போதுமுரண்பாட்டை
வளர்க்கலாமா?
முரண்பாட்டை வளர்த்துக் கொண்டே அமைதிக்குச்
செல்லலாமா" எனவும்.

பகைமையைக் கூர்மைப்படுத்தும்
உபாயங்களுக்குக் கீழும் மேலும்
இரத்தவெடிலே எப்போதுமிருக்கும் என்றவரலாற்றுப்
பாடங்களைப் படிக்கத்தவறிய மாணவரிடம்
மேலும் அவர் வினவினார்.
"அமைதிக்கு எதிரானதல்லவா பகைமையின் கூர்வாள்?" என

"சனங்களைக் கருவிகளாக்கித் 'தம்மை' வளப்படுத்தும்
தந்திரங்களைக் குறித்தும்,
கட்சிகளையும் தலைவர்களையும்
சனங்கள் கருவிகளாக்கிக் கையாள்வதைக் குறித்தும் விளக்குக"
என்றும்.

மேலும்,
"நூற்றாண்டுப் பெருமிதக் குடைகளுக்குக் கீழே
கையேந்தும் மக்களின் அவலக்குரல்களுக்கும்
'தகைசார் மேன்மைகொண்டோரின்' தன்பானப்
பேச்சொலிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில்மறைந்திருக்கும் உண்மையையும் பொய்யையும் கண்டறிக'' எனவும் கேட்டார் அவர்.

''அவமானத்தை எதிர்கொள்ளத் திராணியற்ற மனம்
குற்றவுணர்வுடன் ரகசியமாக இருப்பதை விரும்புதற்கும்,
அந்த ரகசியத்தில்
மோசமான குற்றங்கள் பேசப்படாமல் மறைக்கப்படுவதற்கும்
உள்ள
நோக்கங்களைப் பற்றிச்சொல்க'' என்ற ஆசிரியர்,

''அபிமானங்களையும் விசுவாசங்களையும்
அனுதாபங்களையும் விலக்க முடியாப் பேராளர்கள்
தங்களிடத்தில் வைத்திருக்கும்
புனைவுகளைப் பெருக்கும் கருவிகளையெல்லாம்
எங்ஙனம் கைவிடப்பண்ணுவது'' என்றும்.

அந்தக் கருவிகளால் மனத்தையும் மூளையையும்
சிதைக்கப்பட்டவர்களைக் குறித்தும் கேட்டார் ஆசிரியர்.

''வளராத மரம்' என்றும் காய்த்ததும் இல்லைப்
பூத்ததுமில்லை,
காற்று வீசி யது அசைந்ததுமில்லை - என்றும்
யாருக்கும் நிழல் தந்ததுமில்லை யொரு
குருவிக்குக்கூட அது இடமளித்ததில்லையே' என்றவர்

''பெருமைக்கது பூச்சாடியில் நிற்கலாம், மரமென்று
அறிவீரோ'' என்றார்.

இன்னும்

''மரமென்றால் என்ன?'' என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விலையில்

காடு, மலை, பெரு வெளி, அலை, கடல், காற்று,
வானம், நதி எல்லாம் இதோ
போத்தல்களிலும் அட்டைப் பெட்டிகளிலும்
பைகளிலும்
நீயும் நானும் இதில் எங்கே
அடையாளம் கண்டாயா எதில் நீ எதில் நானென்று?

பூமியெங்கும் ஏராளம் ஏராளம் சிலுவைகள்
ஒவ்வொரு சிலுவையிலும்
குருதியொழுக அறையப்படுகின்றன உடல்கள்
வீதிகளெங்கும் தீ கனலும் ஆணிகள்
துக்கந்தாழ முடியாத மரியாள்
தன்னிரவுகளை சவக்குழியில் புதைக்கிறாள்
வெயில் வந்து அவளை அவமதிக்கிறது
முடியவில்லைக் குருஷேத்திரம்
முடியவில்லை கீதையின் உபதேசமும்
பி.பி.ஸி, சி.என்.என்
அலைவரிசைகளில் ஆயிரமாயிரம் கண்ண பரமாத்மாக்கள்.
பலனை எதிர்பார்க்காது கடமையைச் செய்யும்
கோடி சனங்களின் முகங்களில்
இருளின் பெரும் பள்ளத்தாக்கு.

ஒரு சிகரமும் இல்லை
ஒரு மின்மினி கூட இல்லை
பழகவே முடியாத இருள் பெருகிவர
கால்களை இழுத்துச் செல்கிறது
நவீன யுகத்தின்
மாபெரும் விளம்பரத்தட்டி
என்னையும் உன்னையும் விட பிரமாண்டமாக
அழகாக. .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரகம்

பரதேசியின் நிழல் அலைந்த தடம்
திசைகளெங்கும்
கலவரத்தோடும் நிம்மதியின்மையின் பதற்றத்தோடும்
எல்லாத் தெருவிலும் எல்லா நகரங்களிலும்
சிதறிக்கிடக்கக் கண்டேன்.

தகிக்கும் வாளின் கூராய்
கண்ணை உறுத்தும் தனித்த நட்சத்திரம் அது
பூமியை வானமாக்கி
சிதறிக்கிடந்தது பன்னெடுங்காலமாய்.

விமானங்களின் பறப்பிற்கிடையிலும்
தொலைக்காட்சிகளின் அலைவரிசைகளுக்கிடையிலும்
பெரு நகர் விடுதியில்
மதுவும் இசையும் நடனமும் நிரம்பிய மண்டபத்தில்
ஒளிர்ந்த பகட்டிலே ஒதுங்கிய நிழல்
அவமதிப்பின் எச்சில்.
ஆயினுமது வெம்மையாறாத
எரிகோள்.

எந்த நிழலிலும் தங்காத சுவடது
எந்த மதுவிலும் தணியாத தாகமது
முடியாப் பெரும் பயணத்தில்
நகர்ந்து செல்கிறது

பல்லாயிரம் உள் வெளி வலைகளில்
சிக்கிய நிழல்
கணத்தில் வெளியேறி
விசையெடுத்துப் போகிறது
திசைகளை அழித்து
வெளியையே மாபெரும் திசையாகக் கொண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலை

கத்தியில் உறங்கியது வஞ்சனை
தந்திரங்களில் ஊறிய சொற்களை வைத்து
நடக்கும் சதுரங்க ஆட்டத்தின் முன்னே
பொருத்தி வைக்கப்பட்ட கால்களை நம்பமுடியாத
பதற்றத்தோடு
ஒவ்வொருவரும் காத்துள்ளோம்.

பங்குச்சந்தைகளின் வீழ்ச்சி
மசகு எண்ணெயின் விலையேற்றம்
காடழிவு புயல் மழை வெள்ளப் பெருக்கு
போர்
பட்டினிப் பெருக்கில் அள்ளுப்படும் பல்லாயிரம் வயிறுகள்
மூண்டெரிகிறது பசிப் பெருந்தீ
ஆதித்தீ அது
ஒவ்வொரு தலையிலும் பின்னப்பட்ட ஏராளம் வலைகள்
புலன் வழிகளை பின்னுகின்றன பெரும் வலையாய்

சிறிய சிலந்திகள்
பெரிய சிலந்திகள்
அமெரிக்கச்சிலந்தி
இந்தியச் சிலந்தி
சீனச்சிலந்தி
ரஷ்யச்சிலந்தி
ஐரோப்பிய வெள்ளைச் சிலந்தி

இன்னும் சார்க், கொமன்வெல்த்
ஒபெக் அது இது என்ற ஏராளம் சிலந்திகள்
பின்னும் ஏராளம் வலைகள்.

ஒரு சிலந்தி இன்னொன்றின் பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று வேறொன்றை எதிர்க்கிறது
ஒன்று இன்னொன்றைத் தின்கிறது
சில சேர்ந்து வலையைப்பின்னுகின்றன
சில சேர்ந்து வலையை அறுக்கின்றன
ஆனால் வலையைப்பின்னுவதிலிருந்து
ஒருபோதும் அவை பின்வாங்கவேயில்லை.
சிலந்தியின் இயல்பூக்கம் பெருகப் பெருக
சிறுத்திறுகுகிறது பூமி

நம் காலடியிலும் வலை
நம் தலையிலும் வலை
வலையில் சிக்கிய பறவைகள்
வேடனிடமா
வான வெளியிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூதம்

மாபெரும் சிலந்தியின் நிழலில் மறைகின்றன
இப்பெரும் பூமியின் அலைகளும் கனவுகளும்
நிறங்களும்
ஊற்றுகளும்

அச் சிலந்தி
பின்னும் வலையில் இதோ எல்லாக்கண்டங்களும்
அவற்றின் நல்வினை தீவினைகளும்
ஊழும்.

நமது சிலுவைகளை நாமே செய்கிறோம்
நமது முகங்கள் பிரதிபலிக்கும்
புதைகுழிகளை நாமே வெட்டுகிறோம்.
நமது அறிவீனத்தின் வெற்றிடத்தில்
நிரம்புகிறது சாவுமணியின் பேரொலி
அதுவே வியப்பூட்டும் இசை நமக்கு
எங்கள் விதியின் சிறகை
நாமே வெட்டிக்களிக்கும் நாட்கள் வந்தன
அதைப் பார்த்துக் களிக்கும் காலமும் வந்தது

ஒவ்வொரு சிலந்தியிடமும்
பூமியின் அலைகளையும் சிறகையும்
நிறங்களையும் அழிக்கும் கனவே
இந்த யுகத்தின் விதியாயிற்று.

நிறங்கள் அழிந்து
உருக்கள் அழிந்து
அசைவுகளும் சுழற்சியும் ஒடுங்கி
ஒரே அச்சில் வார்க்கப்படும் பூமியை
ஒரே அச்சில் வார்க்கப்படும் மனிதர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டியங்கும் மாபெரும் இயந்திரம் சுழல்கிறது

இப்போது
நான் யாருடைய அச்சில் வார்க்கப்படுவது
அமெரிக்காவின் அச்சிலா
சீனாவின் அச்சிலா
இந்தியாவின் அச்சிலா
ஐரோப்பியக் கூட்டின் அச்சிலா

சிறிய அச்சுகள் பெரிய அச்சுகள் நடுத்தர அச்சுகள்
இதோ அச்சிலுண்டாகிய பண்டங்கள் நாம் ஒவ்வொருவரும்.

கருவிகள் தயார்
நமது தலையில் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரத்தை
நாமே சுமக்கிறோம்
அது நம்முடையதல்ல என்றபோதும்

நானே என்னைத்தின்கிறேன்
நானே உன்னையும் தின்னுகின்றேன்.
நானே கிருமியானேன்
நானே நோயானேன்

தன்னைத்தானே தின்னும் பூதம் ஆனேனா கடவுளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் நம்பியதும் நம்பவில்லை என்பதும்

நான் நம்பவில்லை இத்தனை கடினமானதாயும்
இலகுவானதாயும்

நீ இருப்பாய் என

அப்படித்தான் நம் வாழ்க்கையும் இருக்கிறது என்றாய்

வெல்லவும் முடியா தோற்கவும் முடியா
முடிவற்ற சதுரங்க ஆட்டத்தில்
இனிமையும் கசப்பும் நிரம்பியிருக்கிறது
என்னருகிலே உள்ள எல்லாக் கிண்ணத்திலும் நீயும்
அப்படித்தானுள்ளாய்

கசப்பாயும் இனிப்பாயும்

"உன்னிடமும் உலகிடமும் கூட அப்படித்தானுள்ளது"
என்றாய்

நாளெல்லாம் அங்கும் இங்குமாகத் திரிந்த பின்
களைத்துறங்கினோம்

கசப்பும் இனிப்புமாக வந்து திரையிட்டது கனவும்

கனவு முடிய, இரவு முடிய விடிந்தது
அப்போதும்
நேற்றும் இன்றும் நாளையும் என்ற
எல்லாக் கிண்ணயத்திலும் இருந்தன
கசப்பும் இனிப்பும் நிறைந்த பானங்கள்

அருகில் நீயிருந்தாய் கசப்பாயும் இனிப்பாயும்
அருகில் நானுமிருந்தேன் கசப்பாயும் இனிப்பாயும்
மேலுமங்கு
உண்மையும் பொய்யுமிருந்தது கசப்பாயும் இனிப்பாயும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலராய் விரிதல்

நிழலின் சூடும் வெயிலின் குளிர்மையும்
தோன்றும் கணங்களில்
இயற்கையின் ஆனந்தத்தை உணர்கிறேன்

அதன் ரகசியத்தையும்.

ஒரு உயிர் மெழுகென உருகுவதும் மலரென விரிவதும்
நிகழும் கணங்களில் நான் உணர்கிறேன்
ஆனந்தத்தின் கணங்களை

ரகசியத்தின் புதிரையும்.

பரவசத்தின் அரும்பிலே மலர்கின்றது மகிழ் மலர்

வானத்திலே பறவைகளோடு விளையாடுகின்றன
நட்சத்திரங்கள்
பறவைகளோடும் நட்சத்திரங்களோடும் விளையாடுகின்றன
குழந்தைகளும் நம் குழந்தைமையும்

ஆனந்தத்தின் கணங்கள் அவிழ்கின்றன முடிவற்று
எல்லையற்று
நீரூற்றும் மலரூற்றும் நம்மருகிற்தான்
நம்முள்ளேதான்.

பரவசத்தின் அரும்பிலே துளிர்க்கின்றன சிறகுகள்
பூவிதழ்ச் சிறகுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் அறியாத ஒன்று

பறவைகளின் துயரங்களை நாமறிவதில்லை
அவற்றின் கஸ்ரங்களையும் அலைச்சல்களையும்
பறப்பதினால் அவை அடையும் களைப்பையும் கூட

பறப்பதெல்லாம் ஆனந்தமேயென்ற எண்ணத்தில்
நாம் அறியத் தவறியதும் உணரத்தவறியதும்
எங்கெங்கும் அறியாமலும் உணராமலும்
விட்டதைப்போலத்தான்

தானியங்களை, பூக்களை, தேனை, கனிகளைத் தேடியலையும்
விதியும் வாழ்க்கையும்
ஒரு கூட்டை அமைப்பதும் காப்பதும்
சந்ததிகளைப் பெருக்கிக் கொள்வதும்
அத்தனை எளிதல்லப் பறவைகளுக்கும்

பறவைகளுக்கும் எதிரிகளும் எதிர்நிலைகளும் இருப்பதை
நாமுணர்வதில்லைப் பலவேளையிலும்

பறத்தலின் அதிசயமுண்டாக்கும் ஆனந்தத்தில்
பறவைகளின் துயரங்களை நாமறிவதில்லை
மேலும் அவற்றின் கஸ்ரங்களையும் அலைச்சல்களையும்
பறப்பதினால் அவை அடையும் களைப்பையும்

நம்மை நாமறியாததைத் போலவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவுகோல்களுக்கப்பாலும் வானம்

ஏதாவதொன்றில் இருக்கிறது ஏதாவதொன்று
அந்த ஏதாவதொன்றை
அறியத் தேவை ஏதாவதொன்று

காட்டை அறியக் கடலை அறிய
கடவுளை அறியக் காதலை அறிய
உன்னை என்னைப் போரைச் சமாதானத்தை
கொன்றவனை மன்னித்தவளை பேயை
துரோகியைத் தியாகியை வரலாற்றை
வெற்றியைத் தோல்வியை அறியவெல்லாம் தேவை
ஏதோவொன்று

அடுக்கக்கடுக்காகத் துயரப் படலங்கள்
கரையமுடியாப் பெருமலை அவள் துக்கம்
அவள் குடலில் செமிபடாத் துக்கத்தை மேலும் சேமிக்கும்
நிகழ்கால அதிகாரத்தின்
பழைய ஞாபகங்களின் வழியாகவே
அவள் அழைத்துச் செல்லப்படுகிறாள் உயிருடன் சுடலைக்கு

ஒவ்வொருவரும் பிணமாக்கப்படும் காலத்தின் முன்னே
அவள் குந்திக் கொண்டிருப்பதைக் கண்டேன்

யுத்த இயந்திரம் எலும்புக்கூடாக்கி
காலத்தின் ஓரத்தில் தள்ளிவிட்டுள்ளது அவளை

இப்போதவள் ஒரு உக்க முடியாத சருகு

அவள் துரோகியா தியாகியா கொலைகளின் ரத்தக்கறை
படிந்தவளா?

பனித்திரையாக விரிந்திருக்கும் இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றவனை மன்னித்தவள் துரோகியா
மேன்மைக்குரியவளா என்று விவாதித்துக்
கொண்டிருந்தார்கள்.

எதற்கும் ஏதாவதொன்றில் இருக்கிறது ஏதாவதொன்று
அந்த ஏதாவதொன்றை அறியத் தேவை ஏதாவதொன்று
என்றவர்கள்
அந்த ஏதாவதொன்றை அறியக் காத்திருக்கிறார்கள் இரவும்
பகலுமாக.

அவளின் வாடை நிரம்பிய ஒரு சருகு உக்கிக் கொண்டிருந்தது.

வரலாற்றின் குருட்டுத்தனங்கள் மேலும் வளர்ந்து
கொண்டிருந்தன
அந்த உக்கிய சருகின் ஈரத்தை உறிஞ்சிக் கொண்டு.

ஏதாவதை அறியத் தேவை ஏதாவதொன்று என்று
அவர்கள் தேடினர் ஏதாவதொன்றை...

அளவுகோல்களுக்கப்பாலும் விரிந்துள்ளது வானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இகம் பரம்

கடவுள் தன்னை விசுவாசிக்கக் கோருகிறார்.

தனது பரலோகத்திற் கழைப்பதற்கு என்னைத்
தூய்மையாளனாக இருக்கும்படி கோருகிறார்.

மேலும் அன்பாக இருக்கும் படியும்
எல்லோரையும் மன்னிக்கும் படியும்
அநீதிகளை ஒழிக்கும் படியும்
அறத்துக்குச் சாட்சியாயிருக்கும் படியும் கட்டளையிடுகிறார்.

நான் கடவுளிடம் நேசமாகவும் நட்பாகவும் இருக்க
விரும்புகிறேன்.

கடவுளின் ஆணையும் வாக்குகளும் என்னை ஆசீர்வதிக்கக்
கோருகிறேன்.

ஆனாலும் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட இந்தச் சேரியில்
பொய்யும் களவும் அநீதியும் வன்முறையும் நிரம்பிய
(சாத்தானின்) உலகத்தில்
என்னைக் கடவுள் வாழ நிர்ப்பந்தித்ததின் காரணத்தினால்
எல்லோருடனும் அன்பாக இருந்தாலும் சண்டையிட
நேர்கிறது.
எல்லோரையும் மன்னிக்க நேர்ந்தாலும் பகைமையே
முற்றுகிறது.
அநீதிக்கெதிராகப் போராட வேண்டுமெனில்
எப்படியோ அறத்தில் வீழ்ச்சியேற்படுகிறது.

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான அப் பரலோகத்திற் கென்னை அழைக்கு முன்
இகலோகத்தில் என்னை உம்முடைய புதல்வனாக
ஏற்றுக் கொள்ளும்
அப்படியே
இந்தச் சேரியையும் உமது பரலோகத்தின்
ஒளியை ஊட்டி ஆளும்
வசையும் திருட்டும் பகையும் கொடுமையும்
அநீதியும் நிரம்பிய
இந்த அயலை
வல்லமையுடன் மாற்றியருளும் தேவனே!
ஆமென்.

தவிர்த்து,
உமது பரலோகத்திற் கழைப்பதற்கு என்னைத்
தூய்மையாளனாக இருக்கும்படி கோருவதும்
மேலும்
அன்பாக இருக்கும் படியும்
எல்லோரையும் மன்னிக்கும் படியும்
அநீதிகளை ஒழிக்கும் படியும்
அறத்துக்குச் சாட்சியாயிருக்கும் படியும்
கட்டளையிடுவதில் என்ன நியாயத்தைக் காண்பேன்.

உம்மால் படைத்தருளப் பட்ட சாத்தான் என்னையும் விடப்
பல்லாயிரம் மடங்கு வல்லமையோடு
உம் நிழலைப் போலவே காலம் நீளத்துக்குமிருக்கையில்
என்னைக் கட்டளையிடுவது என்ன நியாயமோ!

பரலோகக் கனவிற்கென்னை அழைப்பதாயின்
வலிய சாத்தானின் முன்னே
உம்முடைய கட்டளைகளுக்கு எப்படி நான்
ஒப்புதலளிப்பேன்?

ஆகவே என்னிலையை அறிந்தபின் உம் நிபந்தனையை
விதித்தருளும் ஆண்டவரே!

○○

கடவுளாக இருப்பதை விடவும்
சாத்தான் கடவுளாவதும்
கடவுள் சாத்தானாவதும் மிகச் சுலபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவங்களாலானது இந்தப் பாத்திரம்

பாவங்களாலானது இந்தப் பாத்திரம்
எனது இரத்தத்தைச் சுத்தப்படுத்த முடியவில்லை
எனது வலிகளை ஆற்றுப்படுத்தவும் இயலவில்லை
என்னுடைய கண்ணீரைப் போக்கிடவும் விதியில்லை.

எனது நினைவிடம் கேட்கிறேன்,
எல்லாக் கத்திகளையும் எங்கிருந்து
எப்படிப் பெற்றுக்கொண்டேன் என்று...
எல்லா நிராகரிப்புகளையும் அவமதிப்புகளையும்
எங்கிருந்து கற்றுக்கொண்டேன் என்று...

பண்பாட்டுத் தொட்டிலில்
அழுக்குடைகள் நிறைந்திருந்தனவா
வழமைகளின் செல்வழியே
கயமை விருட்சங்கள் நிழல்பரப்பினவா
எங்கிருந்து எங்கிருந்து...?

தாய்மடியில் அன்பின் ஊற்றிருந்தது
தந்தையினிடத்தில் கருணையின் பிரவாக மிருந்தது
நெருப்பிலும் கருணையைக் கண்ட இதயத்தால்
எங்ஙனம் பூவிலே முள்ளை வளர்க்க முடிந்தது?
பேரலைகள் தனிப்படகை அடித்துச் செல்லும் விதி இதுவா?

கடவுளே...!
பாவங்களாலானது இந்தப் பாத்திரம்

எனக்கு நானே அந்நியமாகவும்
எனக்கு நானே விரோதியாகவும்
எனக்கு நானே சந்தேகியாகவும்
என்னை நானே நிந்திப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நானே கழுவேற்றவும்
என்னை நானே நிராகரிக்கவும் கூடிய
பாவங்களாலானது இந்தப் பாத்திரம்

முகத்திற் கருந்திரையும் முதுகிற் பெரும்பாரச் சுமையும்
நாவில் குற்றமும் இதயத்தில் கண்ணீரும்
விழியிற் சிலுவையும் வழியெங்கும் முள்ளும் கொண்ட
விதியைப் பெற்ற பாக்கியவான்
நெருப்பிலே அமுதம் தின்னக் காத்திருக்கிறேன்.

விழிமூட முள்ளேறும் வாழ்வொன்றில்
இன்னும் நிலைத்திருக்க முடியாது
எங்கே எனக்கான சிலுவை?
எங்கே எனக்கான சவுக்கு?

அழுக்குடைய இந்தப் பாத்திரத்தைச் சுத்தப்படுத்த
விரும்புகிறேன்
எங்கே எனக்கான கங்கை?
எங்கே எனக்கான நீரூற்று?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்குறிப்புகள்

தனித்த பயணத்தின் நெடுவழியில்
என்னுடல் அறிந்தது
ஒரு துளி ஈரத்திலிருக்கும்
நதியின் பெருங்கருணையையும் ஆழவூற்றின் பேரன்பையும்.

அக்கணம்,
நீக்கமற நிறைந்த நீரின் கருணை
சிறகை விரித்து அழைத்துச் சென்றது
தனதுலகப் பெருவெளிக்கு.

அங்கே
ஈரத்தின் கருணையில் விரியும் ஒருலகைக் கண்டேன்.
பச்சை மயமாகிய அவ்வுலகில்
கனிகளும் மலர்களும் காற்றின் ரகசிய நடனமும்
வாசனையும் இனிய சுவையும் குளிர்மையும்
ஒளிமிகக் கொண்ட காலமும் இருந்தன.

அவ்வெல்லையற்ற வுலகில்
ஆழப்படியிறங்கிச் செல்லச் செல்லத்
தன்னை வெளிப்படுத்தா நீரின் அழகு -
பச்சைப் பெருக்கில் நெகிழ்ந்திருந்தது
வனமாய், பயிராய், மலராய்க் கனியாய்...

பின்னொருபோது,
ஆகாய வெளியில் சிறகை விரிக்கத் தெரியும்
நீரின் அழகெல்லாம் நீலமா பச்சையா? எனத் திகைத்த
மனதில்
ஒளிர்ந்தது, கருணையின் நிறமும் அன்பின் வர்ணமும்.

நிறமேயில்லை நீருக்கென்ற தருக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொறுங்கிய சிதறல்களில் ஒளிர்ந்தன
அன்பின் வர்ணமும் கருணையின் நிறமும்.

இன்னும்
வர்ணமும் வாசனையும் தன்னுடலாய்க் கொண்ட மலர்
ஒரு போது மலராயும் இன்னொருபோதில் கனியாயும்
தன்னுடலை நெகிழ்த்துகிறது எல்லையற்று.

வரண்டு நடுங்கிய உடலைத் தன்னிதழ்களால்
நெகிழ்த்திக் குளிர்விக்கும் நீரின் பேராற்றல்
கைவிட்டுச் செல்லும் மறதிப் பொருளின்
மங்கிய நினைவல்ல.

கனியின் நினைவாற்றல் மிகுந்த ஒவ்வொருதுளி நீரும்
தாகத்தின் பெருநிலையில் வெடித்துக் கிளம்பும் பெறுமானச்
சுவடுகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவரங்கு

## வன்னி மரணவெளிக் குறிப்புகள்

### முதற்காட்சி

**1.**

பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது இரவு
பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது பகல்
பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது காலை
பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது மாலை
பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது நிலம்
பிணங்களாலும் சாவினாலும் நிறைந்தது வாழ்க்கை

**2.**

நாட்களை மூடி காலங்களை மூடி
மனிதர்களை மூடிப் பேரிருளாய் யுத்தம் விரிந்த போது
நாங்கள் கூரைகளற்ற வெளியில் அலைந்தோம்.
போர்ப்பிரபுக்கள் வெற்றியென்ற போதையைத் தவிர
வேறொன்றையும் கணக்கிற் கொள்வதில்லை
"எங்கேயுன் பிள்ளை? கொண்டு வா போர்க்களத்துக்கு"
என்ற கட்டளை யுத்தத்தின் பரிசாக அளிக்கப்பட்டது
ஒவ்வொரு வீட்டுக்கும்
"எங்கேயுன் தலை? கொடு இந்தக் கொலைக் களத்துக்கு"
என்ற சொல் அரச கட்டளையாக்கப்பட்டது

"கருணையிலான யுத்தம் இது" என்றது அரசு
மனிதநேய நடவடிக்கை என்று அதை
அமைச்சரொருவர் மொழிபெயர்த்தார்.
"விடுதலைக்கான யுத்தம் என்றது இயக்கம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரப் போராட்டம் இப்படித்தானிருக்கும் என்று
விளக்கமளித்தனர் போராளிகள்
"தலைகளைக் கொடுப்பதற்கும் விலைகளற்றுப்போவதற்கும்
உயிரும் மயிரும் ஒன்றா?" எனக் கேட்டாள் ஒரு கிழவி
"சரியான கேள்விதான் அது" என்றார்
கஞ்சிக்கு வரிசையாக நின்றோர்.

காடு கடந்து, வெளி கடந்து, முறிந்து சிதைந்த
தென்னந்தோப்புகள் கடந்து,
களப்புகள் கடந்து, அழிந்த கொண்டிருந்த ஊர்களைக்
கடந்து,
நந்திக் கடலுக்கும் இந்து சமுத்திரத்திற்குமிடையில்
ஒரு மெல்லிய கோடாக ஒடுங்கி நீண்டிருந்த
கடற்கரையில் ஒதுங்கினோம்.
அங்கே காயங்களைப் பெருக்கும் நாட்களுக்கிடையில்
"ஒரு துளி விசத்தில்
அமுதத்தைக் கடைந்தெடுப்பேன்" என்றார் மதகுரு
"அந்த அமுதத்தில் ஒரு மரம் துளிர்த்து
நிழலும் கனியும் தரும்" என்றான் ஒரு போரபிமானி.

சிதறிய பிணங்கள் சிரித்தன அச் சொல் கேட்டு.

## 3.

சாவாடை நிரம்பிய தேவாலயத்தில்
பிணங்களுக்குச் சாட்சியமளித்துக் கொண்டிருந்தனர்
குருவானவர்கள்.
அத்தனை குருவானவருக்கும் சேவகம் செய்து
கொண்டிருந்தாள்
ஒரேயொரு முதிய கன்னியாஸ்திரி.
தேவாலய வளாகத்தில் ஒரு புறாவும் இல்லை
சனங்கள் ஆண்டவரிடம், குருவானவரிடம்,
கன்னியாஸ்திரியிடம் மன்றாடினர்
வளாகத்தில் நிறைந்திருந்த எண்ணூற்றிச் சொச்சம்
பிள்ளைகளையும் காத்தருளும்படி
மூன்றாவது முறையும் மறுதலித்தனர் குருக்கள்.

ஆனால், அபாயம் எல்லாத்தலைகளையும் சூழ்ந்திருந்தது
எக்கணத்திலும்
மலையைச் சுற்றிய பாம்பு கடலையும் குடிக்கத் துடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.

யாரை விசுவாசிப்பது என்று தெரியாத சனங்கள்
பதுங்கு குழிகளுக்குள் உறைந்திருந்தனர்
எதை ஏற்றுக்கொள்வது என்று தெரியாதோர்
சாவின் பின்னால் சென்றனர்.
பிணவாடையும் மலவாடையும் கன்னத்திலறைந்தன
எல்லோரிடமும் இருந்த எண்ணூறாயிரத்து நானூற்று
முப்பத்திநாலு கேள்விகளுக்கும்
ஒருவரிடமும் இல்லை ஒரு பதிலும்.

ஆற்றலுள்ளவனை அழைத்துச் சென்றன பாதைகள்
அவர்களுக்கே கடல் வழிதிறந்தது.
அவர்களுக்கே காடுகள் வழிகாட்டின
அவர்களுக்கே நட்சத்திரங்கள் துணை நின்றன
மற்றவரெல்லாம் பதுங்கு குழியை நெருங்கி வந்த சாவின்
நிழலில் ஆழந்துறங்கினர் உக்கி.

பொறிக்கிடங்காகிய பாதுகாப்பு வலயத்தில் மரண முத்திரை
சிரித்தது.
குருட்டு உலகத்தின் இதயக் கதவுகளை
இந்த மாதிரியான போது இறுகச் சாத்தித்தான்
வைத்திருக்கிறாள்
கொடிய சூனியக்காரி

புள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர் ஐ.நாவின்
அதிகாரிகள்
அறிக்கைகளைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார் சமாதானத்
தூதுவர்
வரலாற்றுக் குறிப்புகளைப் பின்னாளில் எழுதவேண்டும் எனத்
தகவல்களைத் திரட்டினார் ஆய்வாளர்
"ஒவ்வொரு சாவும் செய்திகளே" என்று சொல்லி
எழுதித்தள்ளினர் பத்திரிகையாளர்
ஒவ்வொரு சாவுக்கும் விளக்கமளித்தனர் போர்ப்பிரபுக்கள்.

மரணப்பாம்பு விழுங்கிக் கொண்டிருந்தது அகதிச் சனங்களை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.**

பிணவாடை எழுந்து மலவாடையை மூடிற்று
மலவாடை எழுந்து பிணவாடையை மூடிற்று
அந்தக் கடலோரத்தில் கடல் வாசம் வீசவில்லை
மீன் வாசமும் வீசவில்லை.
புதைகுழிகள் எழுந்த சனங்களையும் இருந்த சனங்களையும்
மூடின.

சந்தையில்லைக் கடைகளில்லைக் கோயிலில்லை
பள்ளியில்லைப் பாடங்களுமில்லை பாட்டும் கூத்துமில்லை
தெருவில்லை கூடிக்களிக்க ஆட்களில்லை
புணர்ச்சியில்லைக் காதலில்லை உப்பும் புளியுமில்லை....

எழுந்து வந்த சூரியனின் உடலெங்கும் இரத்தம்
துக்கந்தாழாச் சூரியன் வீழ்ந்த இடமும் இரத்தம்
கண்ணீர் பெருகி வீழ்ந்த கடலும் இரத்தம்.

**6.**

காலையில் பிணங்கள்
மாலையில் பிணங்கள்
இரவில் பிணங்கள்
காலையில் இரத்தம்
மாலையில் இரத்தம்
இரவில் இரத்தம்

சிதறிய பிணங்களைக் கூட்டியள்ளிக் குழியிற் புதைக்க
பிணங்களாலும் புதைகுழிகளாலும் நிறைந்தது
"மாத்தளன்" மணற்பரப்பு
அத்தனைக்கும் சாட்சியாகினர் குருவானவரும் விசுவாசிகளும்..

**7.**

"உன்னுடைய வெள்ளாடையைக் களைந்து விடு" என்று
தலைமைக்குருவானவரைப் பார்த்துக் கேட்டாள் ஒரு தாய்
அக்கணத்திலே தேவாலய வளவினுள்
அரசியல் விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன
வெண்ணிற ஆடையோடு கரியதொரு நிழல் வந்து
முத்தமிடுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய இரவு கண்ட கனவைச் சொன்ன இளைய பாதிரியார்
"போரின் தோல்வி நெருங்குகிறதே?!" என்று கலங்கினார்.
"நீ போர் வீரனா களத்தில் கொல்லப்படுவதற்கு?" என்று
கேட்டார்
இன்னொரு பாதிரி கேலியோடு...
"சத்தமிடாதே, போர் நம்மை நெருங்குகிறது" என்றார்
இன்னொரு முதிய பாதிரி.
"இல்லை, போரை நாமே நெருங்கினோம்" என்றார் இளைய
பாதிரியார்.

அந்த வாளாகத்தைச் சுற்றி கலங்கிய விழிகளோடு பல்லாயிரம்
சனங்கள்
செபமாலை மாதாவின் கால்களிலே கண்ணீர் விட்டனர்.
பிரார்த்தனை செய்தனர்.
ஒரு கோப்பை கஞ்சிக்காகவும்
இன்னும் பொத்திக் காத்திட முடியாப் பிள்ளைகளுக்காகவும்
போக்கிடமின்றிய விதியைக் கரைத்து வழியேற்றுமாறும்
மன்றாடினர் மரியாளிடம்.

பால்மாவும் அரிசியும் கோதுமையும் பொதியிடப்பட்ட மீனும்
நிரம்பிய பதுங்கு குழிகளில்
குருவானவர்கள் இருளோடு இருளாகப் பதுங்கியிருந்தனர்.
அவர்களில் யாரும் பூசைக்குச் செல்லவில்லை.
யாரும் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்யவுமில்லை.
பதிலாக யுத்தத்தின் விண்ணாணங்களைப் பற்றிப் பேசிக்
களித்தனர் பொழுதெல்லாம்

அன்பும் கருணையும் அமைதியும் சமாதானமும் செத்துக்
கிடந்தன கால்களிடையே.

## 8.

மரண தண்டனை பற்றிய எச்சரிக்கை
முள்வேலிகளை நிறுத்தியது கடலோடிகளின் முன்னால்.
ஒரு படகும் தப்பிச் செல்ல முடியாதென்று
கரை நீளம் கொத்தித் துளையிடப்பட்டிருந்தன.
விரிந்த கடலும் வானிலே எழுந்த நட்சத்திரமும்
அழைத்த போதும் யாரும் செல்லத் துணியவில்லை
அந்தச் சாவரங்கிலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைகளற்ற கடலோடிகள் மணலிற் புதைந்தனர்.
தப்பிச் சென்றோரும் கடலிற் புதைந்தனர்.

## 9.

ஒரு மருத்துவன் புண்ணுக்கு மருந்திட்டான்
இன்னொரு மருத்துவன் புண்ணைத் தோண்டினான்
காயங்களின் பெருவெளியில் ஊனமும் ஈனமும் பெருகிச்
சென்றது
நாய்களுமில்லை எதையும் சுத்தப்படுத்துவதற்கு...

பள்ளிக்கூடங்களை மருத்துவமனையாக்கி
மருத்துவ மனைகளைக் கொலைக்கூடங்களாக்கி,
மணல்வெளியைப் புதைகுழிகளாக்கி
வீடுகளை அகதி நிலமாக்கி,
கடற்கரையைக் மலக்காடாக்கி
கண்ணீரை ஏந்தி நின்ற சனங்களை ஏளனம் செய்தனர்
யுத்தப் பிரபுக்கள்.

## 10.

பூசையுமில்லைத் தேவாரமும் இல்லை
பூப்பறிக்கவொரு மரமுமில்லை
தின்பதற்கு காய்கறியும் இல்லை
சீழ்ப்பிடித்த வாழ்விலே பழமொன்றைக் கண்டு
பல நாளானதே

கோயிலுமில்லை தெய்வமுமில்லை
கொண்டாட்டமுமில்லை விருந்துமில்லை
குந்தியிருப்பதற்கொரு பொழுதுமில்லை
பேயளைந்த வாழ்விலே உயிரொன்றைக் காக்க
விதியில்லையே!"
என்ற புலம்பல் கேட்டது அருகிருந்த அகதிக்
கூடாரத்தினுள்ளே...

## 11.

இரவே நிறத்தை மாற்று பகலே வழியை மாற்று
காற்றே குணத்தை மாற்று கடலே நிறத்தை மாற்று
நிலமே எம்மையெல்லாம் உள்ளிழுத்துக் காப்பாற்று.


கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் வெறியோடும் வெற்றிக் கனவோடும் மோதும்
படைகளுக்குத் தேவை
சனங்களின் தலைகள்.
சனங்களின் தலைகளுக்காகவே போரும் வெற்றியும்

ஒருவன் இறந்த தலைகளை எண்ணுகிறான்
இன்னொருவன் உயிரோடு வந்த தலைகளை எண்ணுகிறான்
புள்ளிவிவரங்களால் தங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்
ஒவ்வொருவரும்.
புள்ளிவிவரங்களே வெற்றிக்கான முதலீடு?!

சனங்களின் புள்ளிவிவரங்கள் இரத்தத்தில் உறைகின்றன
வரலாற்றில் படிகிறது இரத்தக் கறை.

**12.**

எவ்வளவுதான் வாழ்ந்தபோதும் தெரியவில்லை
போர்ப்பிராந்தியத்தில்
ஒரு பகலை எப்படி வெல்வதென்று
ஒரு இரவை எப்படிக் கடப்பதென்று
ஒரு காலையை எப்படி எதிர்கொள்வதென்று
மாலையில் பீரங்கிகள் முழங்கின
காலையில் பீரங்கிகள் முழங்கின
இரவில் பீரங்கிகள் முழங்கின
இதற்கிடையில் எப்படி வாழ்வதென்று தெரியவில்லை
ஒருவருக்கும்
நெருப்புக்கு அடியில் கிடந்தனர் எல்லோரும்
தீயெழுந்து ஆடியது பெருநடனத்தை.

கையிலே தூக்கிய பிள்ளையிலிருந்து ரத்தம் ஒழுகியது
அவளூட்டிய பால் அப்படிச் சிந்தியது.
சாவுக்கு உயிரைப் பரிசளிக்கும் ஒரு நிகழ்ச்சியில்
தவறாமல் எல்லோரும் பங்கெடுத்தோம்

மனைவியின் தாலியை மகளுக்கு அணிவித்தான்
ஒரு தந்தை
பிள்ளையைக் காப்பதற்கும் போர்க்களத்தில் இருந்து
மீட்பதற்குமாக.
ஒரு தாயாக, தந்தைக்கே மனைவியாக மாறினாள் மகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடையவோ பிள்ளையை ஏந்தித் தானே தாயென்றாள்
ஒரு கன்னி
வழியில் வந்த முகமறியா ஒருவனோடு சேர்ந்திருந்தாள் ஒருத்தி
சாவரங்காகிய போர்க்களத்தில்
ஒவ்வொரு நாளும் நட்சத்திரங்கள் உதிர்ந்து
கொண்டேயிருந்தன.
தனித்திருந்த இளையோரெல்லாம் போருக்கே என்று
நாட்டின் விதியுரைத்தபோது
இப்படி நாடகங்கள் ஆயிரம் உருவாகின.

உண்மையை விடவும் பொய் பெரும் கவசமாயிற்று
அப்பொழுது.

## 13.

சடங்குகளும் இறுதி மரியாதையுமில்லாத
பிணப்புதையலைச் செய்து களைத்தேன்.
காட்டில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த சாவுடல்களில்
தெரிந்த முகங்களைத் தேடி அலுத்தேன்
"இனி எங்கே செல்ல?" என்று கேட்டவருக்குப்
பதில் சொல்ல முடியாமற் தவித்த வீரரைப் பார்த்துச்
சிரித்தேன்.
நடந்து வந்த பாதை
நமது காலடியிலேயே முடிந்து போயிற்றுப் போ"
என்று சொன்னவரைக் கண்டு அழுதேன்.

## 14.

"அந்தக் காலம் ஒரு புண்ணாயிற்று
அதை மருந்திட்டுக் காப்பதற்கு யாருளர்?" என்று தேடினர்
ஞானிகள்
"சிரிப்பென்றால் என்ன அம்மா?" என்றது குழந்தை
அப்போதுதான் அவளுக்கே நினைவு வந்தது அப்படியொன்று
இருந்ததென்று
ஆனால், அவள் சிரிப்பை மறந்திருந்தாள்
எவ்வளவோ முயன்றபோதும் அவளிடம் ஒரு சிறு மலரும்
முகிழ்க்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15.

மழையடித்தது வெயில் எறித்தது
மழையடித்ததா? வெயில் எறித்ததா?
அகதிப் பிராந்தியத்தில்
ஓயாது வீசிக்கொண்டிருந்த புயலில் சிக்கிய தோணியை
மீட்பதற்கென்று தூர தேசத்திலிருந்து
நல்லாயன் வருவார் என்று சொன்னார்கள்
சொன்னவரைக் காணவில்லை என்றபோது சொன்னார்கள்,
“சிங்கத்தின் குகையில் புலி உறங்கப் போயிருக்கு“ என்று.

## 16.

தென்னாசியாவின் மிகப் பெரிய சேரி
தென்னாசியாவின் மிகப்பெரிய சிறைக் கூடம்
தென்னாசியாவின் மிகப்பெரிய கொலைக்களம்
நானிருக்கும் இந்த மலக்கரை என்று மணலில் எழுதிக்
கொண்டிருந்தாள் ஒரு சிறுமி

வெட்ட வெளியிற் சனங்கள் நின்றனர்
பதுங்குகுழியில் தலைவர்கள் இருந்தனர்
பதுங்கு குழியில் மதகுருக்கள் இருந்தனர்
பதுங்குகுழியில் அதிகாரிகள் இருந்தனர்
பதுங்கு குழியில் தளபதிகள் இருந்தனர்.

பிணக்காட்டிடையும் மலக்காட்டிடையும்
முள்ளேறிக் கிடந்து உழலும் மனிதரைக் காப்பதற்கு
ஒரு மீட்பரும் வரவில்லை.

## இரண்டாம் காட்சி

“உன்னுடைய தலையை நெருப்புக்குள் ஏன் வைத்தாய்?“
என்று கேட்டான் படையதிகாரி
அவனே ஒரு தீச்சட்டியை வைத்திருந்தான்.

நாங்கள் ஒரு சேரியிலிருந்து இன்னொரு சேரிக்கு
மாறிக்கொண்டிருந்தோம்

தென்னாசியாவின் மிகப் பெரும் சேரி
தென்னாசியாவின் மிகப்பெரிய சிறைக் கூடம்
தென்னாசியாவின் மிகப்பெரிய வதை கூடம்
நானிருக்கும் இந்த மலக்குழியருகில் என்று மணலில்
எழுதிக் கொண்டிருந்தாள் ஒரு சிறுமி

மிஞ்சியவரின் கைகளில் துயரப்பொதியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கருப்புப்பிரதிகள்
## 2013 வெளியீடுகள்

01. உள்ஒதுக்கீடு: தொடரும் விவாதம் - ம. மதிவண்ணன் ............ 50.00
02. தேசத்துரோகி (சிறுகதை) ஷோபாசக்தி ................................... 120.00
03. கொரில்லா (நாவல்) ஷோபாசக்தி ............................................. 110.00
04. மௌன வதம் (நாவல்) அர்துரோ வான் வாகனோ
மொழியாக்கம்: ராமாநுஜம் ......................................................... 250.00
05. ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்
கருணாகரன் (இலங்கை) (கவிதைகள்) ....................................... 75.00
06. அத்தாங்கு (குறுநாவல்) மெலிஞ்சிமுத்தன் (கனடா) ................ 60.00
07. காலிக்கோப்பையும் தானாய் நிரம்பும் தேநீரும்
யாழன் ஆதி (ஜென் கவிதைகள்) ................................................ 70.00
08. மரிஜ் ஜாப்பி: சி.பி.எம். நிகழ்த்திய தலித் இனப்படுகொலைகள்
மொழியாக்கம் - இனியன் இளங்கோ .......................................... 60.00
09. பயங்கரவாதப் பிரஜைகளும் காட்டுமிராண்டிக் கனவான்களும்
கலையரசன் (நார்வே) ................................................................. 60.00
10. இஸ்லாம்: அரபுப் பண்பாட்டுப் புரட்சி கலையரசன் (நார்வே)
11. மெல்ல முகிழ்க்கும் உரையாடல் ம. மதிவண்ணன் (அச்சில்)
12. ஏதிலியைத் தொடரும் நிலா (கவிதைகள்)
ம. மதிவண்ணன் (அச்சில்)
13. திரையின்றி அமையாது உலகு (கட்டுரைகள்)
குமரன் தாஸ் (அச்சில்)
14. ஜாதியற்றவளின் குரல் (கட்டுரைகள்) ஜெயராணி (அச்சில்)
15. சிலுவைப்போர் எனும் ஏகாதியத்திய அரசியல் (அச்சில்)
16. ஒரு பனஞ்சோலை கிராமத்தின் - என்.கே. ரகுநாதன் (அச்சில்)
17. அருந்ததியச் சுடர் ராவ் சாகிப் எல்.சி. குருசாமியின் சட்டமன்ற
உரைகள் - மொழியாக்கம் ம. மதிவண்ணன் (அச்சில்)
18. கருஞ்சட்டை: தினமணியும் பாசிசமும் - (கட்டுரை)
எஸ்.வி. ராஜதுரை (அச்சில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணவறையின் மணம் நீங்காத வாழ்வை சாவுப்பட்டியல்
சுற்றி வளைக்கின்ற போதும், வயல்களில் மீந்திருக்கும் நெல்மணிகளை
இன்னொரு பருவகாலத்துக்குப் பரிசளிக்க விரும்புகிறார் கருணாகரன்.

நின்று நிதானித்து திரும்பிப்பார்த்து வாழ்வின் மீது கேள்விகளை எழ
அவர் அனுமதிக்கிறபோது, நூற்றாண்டுகளாகத் தூங்கியிராத
ஆன்மா ஒன்றின் குரல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org